விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 30 வியாழக்கிழமை (13.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 085




# மட்டு.தேர்தலைப் புறக்கணிக்கக் கோரி

# தேர்தல் ஆணையாளரிடம் மனு கையளிப்பு

## ஐ.தே.கட்சியின் ஏற்பாட்டில்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாநகர சபை உட்பட 9 உள்ளூராட்சி சபைகளுக்கு இந்த வார முற்பகுதியில் நடந்து முடிந்த தேர்தல்களை எதிர்த்து ஐக்கிய தேசியக்கட்சி நேற்று கொழும்பு ராஜகிரியவிலுள்ள தேர்தல் செயலகத்திற்கு முன்பாக கண்டன ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியது. ஊர்வலத்தின் முடிபில் தேர்தல் ஆணையாளரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)



## மட்டக்களப்பு உள்ளூராட்சித் தேர்தல் ஜனநாயக ரீதியில் நடத்தப்படவில்லை

### ★ விடுதலைப்புலிகள் தெரிவிப்பு ★

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஜனநாயகத்தை அழிக்கும் ஒரு செயற்பாடு என்று விடுதலைப்புலிகள் கடுமையாகச் சாடியுள்ளனர்.

இது தொடர்பாகக் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த விடுதலைப்புலிகள் இயக்கத்தின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன்,

இத் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட இளந்திரையன்,

நான் மட்டக்களப்பு மண்ணின் மைந்தன். துணை இராணுவக் குழுவின் ஆதரவுடன் இந்த அரசாங் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு தேர்தல் முடிவுகளை சர்வதேசம் ஏற்றுக் கொண்டது

### ★ அரசாங்கம் தெரிவிப்பு ★

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டிருப்பதானது ஜனநாயக ரீதியான முன்னோடி நடவடிக்கை என சர்வதேச நாடுகள் பாராட்டியிருப்பதாக இலங்கை அரசாங்கம் கூறுகின்றது.

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் 9 உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடத்தப்பட்ட தேர்தல்கள் தொடர்பாக இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து விளக்கமளித்ததாக நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம கூறினார்.

ஜனநாயக ரீதியில் நடத்தப்பட்டிருக்கும் இந்தத் தேர்தல் சிறந்தவொரு முன்னோடி நடவடிக்கையென வெளிநாடுகள் பாராட்டியிருப்பதாகக் குறிப் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்க பொதுத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டம்!

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று ஆட்சியமைப்பதற்காக இவ்வருட இறுதிக்குள் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று ஜே.வி.பியின் ஆதரவின்றி ஆட்சியமைப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ விரும்புவதாகத் தெரியவந்துள்ளது. அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்து வரும் ஜே.வி.பி. முக்கிய தருணத்தில் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடும் என்ற அச்சம் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

ஜே.வி.பியினால் அரசாங்கம் கவிழ்க்கப்படுவதற்கு முன்பாக நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் மூலம் பெரும்பான்மைப் பலத்துடனான ஆட்சியினைக் கைப்பற்றுவதற்கு ஜனாதிபதி எண்ணியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தை இராணுவம் ஆக்கிரமித்துள்ள நிலையில் கிழக்கிற்கான பிரதிநிதித்துவத்தைத் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளுக்குப் பெற்றுக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிக் குழுவில் ரி.எம்.வி.பி. கட்சி

(கொழும்பு)

கருணா அணியிலிருந்து பிரிந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டக்களப்பு உள்ளூராட்சித் தேர்தலில் பெருவெற்றிபெற்றுள்ளதால் அவர்கள் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் பங்குகொள்வதற்கு முழு உரித்துடையவர்களாகவுள்ளார்கள் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இன்று தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் இந்த நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி. ஆகையால் இந்த நாட்டில் தசாப்தங்களாகத் தொடரும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## 'வடக்கின் பெரும்போர்' மழையால் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

'வடக்கின் பெரும்போர்' என வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் இன்று ஆரம்பமாகவிருந்த கிரிக்கெட் போட்டி மழை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலான 102-வது கிரிக்கெட் போட்டி இன்றுமுதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்தது. எனினும் யாழ்.குடாநாட்டில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## முரண்பாடுகளை தீர்த்த பின் அரசியல் சபை நிறுவப்படும்



### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

17-வது அரசியல் அமைப்புத் திருத்தம் மற்றும் அரசியல் அமைப்புச் சபையை நிறுவுவது தொடர்பில் காணப்படுகின்ற சட்டம் மற்றும் நிர்வாக முரண்பாடுகள் தீர்க்கப்பட்டதன் பின்னரே அரசியல் அமைப்புச் சபை நிறுவப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒழுக்கத்தை (10 ஆம் பக்கம் பார்க்க)

## மடுப் பகுதியில் நேற்று விமானக் குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னார், மடுப் பிரதேசத்தின் மீது விமானப் படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக் காலை குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

நேற்றுக் காலை 7.30மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலின் போது விடுதலைப்புலிகளின் மூன்று பிரதான முகாம்கள் முற்றாக அழிக்கப்பட்டதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

வடக்குக் கிழக்கில் (10 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கூட்டமைப்பு எம்.பிக்கள் சென்ற வாகனங்கள் மதவாச்சியில் வைத்து தீவிர சோதனை

(கொழும்பு)

[illegible] நாடாளுமன்ற உறுப்பினர் கி.[illegible]ன் இறுதி நிகழ்வுகளில் கலந்து [illegible]காக வன்னி சென்ற தமிழ்த் தேசி[illegible]மைப்பின் நாடாளுமன்ற உறுப்பி[illegible] கொழும்பு திரும்பும் வழியில் கடுமை[illegible] கடுபிடிகளுக்கு உட்படுத்தப்பட்டது [illegible]ர் ஒருமணிநேரம் மதவாச்சி சோத[illegible]லையத்திலும் தடுத்து நிறுத்தப்பட்[illegible] குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

[illegible]தனால் தமக்கும் படையினருக்கும் [illegible]யே கடும் வாக்குவாதம் இடம்பெற்றதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கி.சிவநேசனின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வன்னிக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும், இறுதி நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடினர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசனை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது முகம் கொடுத்துவரும் நெருக்கடிகள் குறித்தும் கலந்துரையாடினர்.

அதன் பின்னர் வன்னியிலுள்ள பொது அமைப்புகளின் அதிகாரிகளையும் பிரதிநிதிகளையும் சந்தித்து அங்குள்ள நிலைமைகள் குறித்து கேட்டறிந்தனர்.

அங்கு இடம்பெற்ற பொது நிகழ்வுகளிலும் அவர்கள்கலந்து கொண்டனர். இதனையடுத்து நேற்று முன்தினம் காலை வன்னியிலிருந்து கொழும்பு திரும்புவதற்கு முன்னர் மீண்டும் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசனுடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பு நிறைவடைந்ததும் வவுனியா நோக்கி 8 வாகனங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 13 பேரும் புறப்பட்டனர்.

பிற்பகல் 2 மணியளவில் ஓமந்தை சோதனைச் சாவடியூடாக வவுனியாவுக்கு வந்த இவர்கள் அங்கிருந்து கொழும்பு வருவதற்காக மதவாச்சிக்கு வந்தபோது சோதனைச் சாவடியில் பிற்பகல் 3 மணியவில் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

மதவாச்சி சோதனைச் சாவடியில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் பயணித்த அனைத்து வாகனங்களையும் துருவித்துருவி ஆராய்ந்த படையினர் அவர்களது உடைமைகள் அனைத்தையும் கொட்டி ஒவ்வொன்றாக பரி சோதனை நடத்தினர் என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## சாவ.இலங்கை வங்கிக் கிளையும் கணனி வலைப்பின்னலுடன் இணைவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் 301-வது கிளையாக சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை நாடளாவிய ரீதியிலான கணனி வலைப்பின்னலுடன் இணைகிறது.

இந்நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சாவகச்சேரி முகாமையாளர் எஸ்.சந்திரகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பொ.அ.அருமைநாயகம் பிரதம அதிதியாகவும் செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்கின்றனர். (ச)

## சி.டி.எம்.ஏ தொலைபேசியின் அலை அதிர்வு மாற்றம்

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிக் கொம்மின் சிற்றிலிங் சி.டி.எம்.ஏ தொலைபேசியில் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் வானொலி அலை அதிர்வு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா ரெலிக் கொம் அறிவித்துள்ளது.

இம்மாற்றம் காரணமாக நேற்று நள்ளிரவு சிற்றிலிங் சி.டி.எம்.ஏ தொலைபேசிச் சேவையில் தடங்கல் ஏற்பட வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சி.டி.எம்.ஏ தொலைபேசி செயற்படாது போனால் அந்தத் தொலைபேசியை சமீபத்திலுள்ள சிறிலங்கா ரெலிக்கொம் அலுவலகத்திற்கு கொண்டு செல்லுமாறு சிறிலங்கா ரெலிக்கொம் கொழும்பில் அறிவித்துள்ளது. (எ-5)

## அல்லைப்பிட்டி மக்களுக்கு உதவுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வருகை

அல்லைப்பிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு உதவி வழங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது. நிக்கொட் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லைப்பிட்டியில் மீளக் குடியமரும் குடும்பத்திற்கு ரூபா 25 ஆயிரம் வீதம் வழங்கவும் கியூடெக் நிறுவனம் போன்ற அமைப்புகள் வாழ்வாதாரம் சிறுவர் நலத்திட்டங்கள் போன்றவற்றிக்கு உதவிகளை வழங்கவும் முன்வந்துள்ளன.

அத்துடன் அல்லைப்பிட்டி பகுதியில் மீளக் குடியமர்வதற்கு 80 குடும்பங்கள் தயாராகவுள்ளபோதும் அங்கு 33 வீடுகளை புதிதாக நிர்மாணிப்பதற்கும் 29 வீடுகளை புனர்நிர்மாணம் செய்வதற்குமே தற்பொழுது அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஏற்கனவே 21 குடும்பங்கள் மீளக் குடியமரச் சென்றுள்ள போதும் அவர்களுடைய சொந்த வீடுகள் சிதைவடைந்துள்ளமையினால் அப்பகுதியிலுள்ள பராசக்தி வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

மீன் பிடியை வாழ்வாதாரத் தொழிலாக கொண்ட இவர்கள் கடற்படையினரின் தடையுத்தரவால் மீன் பிடிக்க செல்ல இயலாத நிலையில் உள்ளனர். எனினும் இந்த விடயம் தொடர்பாக கடற்படையினருடன் கலந்துரையாடி அவர்களுக்கு மீன் பிடிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்து உதவ இருப்பதாக யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் கூறியுள்ளார்.

கடந்த 2006ஆம் ஆண்டு மேமாதம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8பேர் உட்பட 13 பொதுமக்கள் ஆயுத தாரிகளால் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் ஆகஸ்ட் மாதப் பகுதியில் அங்கு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து யாழ்.குடாநாட்டின் தீவகப் பகுதியான அல்லைப் பிட்டியிலிருந்து பெருந்தொலையான மக்கள் இடம்பெயர்ந்து யாழ். நகரப் பகுதி மற்றும் பொது இடங்கள், ஆலயங்கள்,நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கணவனும் மனைவியும் புத்தளத்தில் சுட்டுக் கொலை

புத்தளம் வண்ணாத்திவில்லுப் பகுதியில் நேற்று அதிகாலை கணவனும் மனைவியும் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். வண்ணாத்திவில்லு இறால்குழிப்பகுதியில் வசிக்கும் தமிழர்களான சக்திவேல்பிள்ளைராஜா(வயது-22), அவரது மனைவியான நிரஞ்சலா(வயது-20) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்களது வீட்டுக்கு நேற்று அதிகாலை 2 மணியளவில் சென்ற ஆயுததாரிகள் வீட்டு முற்றத்தில் கணவனையும் வீட்டிற்குள் வைத்து மனைவியையும் சுட்டுக்கொன்றிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டபோதும் தாம் விடிந்த பின்னரே சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்ததாக அயலவர்கள் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் இடம்பெற்ற போது இவர்களது இரண்டு பிள்ளைகளும் வீட்டில் இருந்துள்ளனர். எனினும் அவர்களுக்கு இச்சம்பவத்தில் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இக் கொலைக்கான காரணம் உடனடியாக தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-5)

## விடுமுறைக்கு முன்னர் பெறுபேறு வெளியாகும்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை விரைவில் வெளியிட நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

முதலாம் தவணை விடுமுறைக்கு முன்னர் பரீட்சை முடிவுகளை வெளியிடவுள்ளதாக தெரிவித்துள்ளார். எதிர்வரும் உயர் தரப் பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இன்று முதல் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார். (ச-2)


**மேரி திருமண நிலையம்**

வெளிநாட்டில் வசிக்கும் P.R உடைய Non R.C., R.C., இந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு உள்நாட்டிலும்,வெளிநாட்டிலும் வசிக்கும் மணமகன், மணமகள் தேவை 1962 -1985க்கு உட்பட்டவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**ச.உமாச்சந்திரன்**
**46,புதுவீதி,கொய்யாத்தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**
(938) T.P:-0779116346



**முதலாம் ஆண்டு நினைவில்...**

பிறப்பு
11 ✝ 07 ✝ 1980



இறப்பு
13 ✝ 03 ✝ 2007

**அமரர் முகமது அலி நந்தகுமார்**

"நேசம் கொண்ட எம்
பாச மகனே உனக்கு
யார் செய்த நாசமடா?"
ஆண்டொன்று ஓடி மறைந்தது
அழுகையின் கனதி ஓயவில்லையடா!
நந்தா உன் பிரிவின் துயர்
சிந்தையில் நீண்ட வெற்றிடமாய்...
தந்தை தாய் கதறல்களும்
சகோதர சகோதரிகளின் பதறல்களும்
உறவினர்களின் இரங்கல்களும்
ஊராரின் அனுதாபங்களும்- இனி
என்றும் உனக்கு சொந்தமடா!

*இவரின் ஆன்ம சாந்திக்காக 13.03.2008 காலை 11 மணிக்கு புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுத்து பிரார்த்திக்கின்றோம்.*

28/2, A.V றோட்,
கொழும்புத்துறை.

-குடும்பத்தினர்.

(937)


## அரசாங்க அறிவித்தல்

### பழுதடைந்த உணவுப் பொருட்களுக்கான கூறுவிலை கோரல்

கோண்டாவில்,நாவற்குழி -I, II அரச உணவுக்களஞ்சியங்கள் மற்றும் இணுவில் லக்ஷ்மி திரையரங்கு ஆகியவற்றில் மனிதப் பாவனைக்கு பயன்படுத்த முடியாத ஆனால் கால்நடைத் தீவனமாக பயன்படுத்தக் கூடிய பின்வரும் பொருட்கள் காணப்படுகின்றது.

| பொருள் | கோண்டாவில் | நாவற்குழி I, | நாவற்குழி II, | லக்ஷ்மி திரையரங்கு இணுவில் |
|---|---|---|---|---|
| அரிசி வகை | 18900 கிலோ | 8426 கிலோ | 32259 கிலோ | |
| கடலை | 495 கிலோ | | | 22574 கிலோ |
| ரவை | | | | 2650 கிலோ |
| பயறு | | | | 5632 கிலோ |
| பருப்பு | | 536 கிலோ | 66 கிலோ | |
| கோதுமை மா | | 2503 கிலோ | 46 கிலோ | |
| சோயா மா | | 78 கிலோ | | |

இப் பொருட்கள் விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப்பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்பு பணமாக ரூபா 500.00 உம், மீளளிக்கக்கூடியதான வைப்பாக ரூபா 15000.00 உம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை புனர்வாழ்வுக்கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் 'பழுதடைந்த பொருட்களுக்கான கூறுவிலை' என குறிப்பிட்டு 24.03.2008 ஆம் திகதி 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு புனர்வாழ்வுப்பகுதியிலுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

பொருட்களை பார்வையிட விரும்புபவர்கள் அரச உணவுக் களஞ்சியங்களில் வேலை நாட்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணிவரை அதற்குரிய களஞ்சியங்களில் பார்வையிடலாம்.

கூறுவிலைகள் 24.03.2008ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும்.

பொருட்களை எடுப்பவர்கள் மாவட்ட செயலக இலங்கை வங்கிக் கிளையில் பணத்தை உடனடியாக செலுத்தி பொருட்களை உடனடியாக களஞ்சியத்தில் இருந்து அகற்ற வேண்டும்.

***கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.***

**க.கணேஷ்,**
**அரசாங்க அதிபரும்/**
**மாவட்ட செயலரும்**
**யாழ்.மாவட்டம்**

(C-853)

# இன்று ஒரு தகவல்

## உடலும் உள்ளமும்

எங்களில் சிலர் மிகவும் தைரியசாலியாக இருப்பார்கள். "அந்த ஆளுக்குக்கிட்ட வருவதற்கு எமன் கூடப் பயப்படுவான்" என்று சொல்வது வழக்கம். தைரியசாலிகளை நெருங்குவதற்கு எமன் பயப்படுகிறான் என்பது உண்மைதான். மன வலிமை மனிதனைக் காப்பாற்றும் என்பது மருத்துவ ரீதியான உண்மை. உடற் கோளாறுகள் மன ஆரோக்கியத்தைப் பாதிக்கும்.

மன எழுச்சி , மனப் போராட்டம் என்பன உடல் இயக்கத்திலே மாறுதலை உண்டாக்குகின்றது. சில வகையான நோய்களுக்கும் மனதுக்கும் இருக்கிற சம்பந்தம் என்ன என்பன பற்றி இப்பொழுது ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆஸ்துமா, மூட்டுவலி, பெருங்குடல் அழற்சி, உயர் இரத்த அழுத்தம், சோரியாஸீஸ் என்னும் தோல் வியாதி, வயிற்றுப் புண் , தைராய்டு, நச்சுத்தன்மை போன்ற நோய்களை உண்டாக்குவதிலே மனதின் பங்கு என்ன என்பது பற்றியெல்லாம் ஆய்வு செய்து பார்த்திருக்கிறார்கள். அத்துடன் யாரும் நமக்கு உதவ முடியாது என்கிற மனோபாவம். (Helpless ness) கைவிடப்பட்ட மனோநிலை (Hopel essness) என்பன நோயின் தீவி ரத்தை அதிகரிக்கச் செய்கிறதாம்.

இவர்கள் கைகால் வலிக்கிறது, உடம்பு அசதியாக இருக்கிறது, தூக்கம் வரவில்லை, முதுகு வலிக்கிறது, உடம்பிலே உணர்ச்சி குறைகிறது, கை, கால் விரல்கள் மரத்துப் போகிறது எனப் பல காரணங்களைக் கூறிக் கொண்டு டாக்டர்களைத் தேடி வந்து கொண்டிருக்கிறார் களாம்.

நெஞ்சுவலி யாருக்கு வருகிறது தெரியுமா? பதற்றம், போட்டி மனப்பான்மை, அளவுக்கு அதிகமான வேகம், துடிப்பு, பேராசை எதிலும் கட்டுப்பாடு, நேரம் தவறாமை போன்ற மனவாகு உள்ளவர்கள் பெரும்பாலும் நெஞ்சுவலிக்கு ஆளாகிவிடுகிறார்களாம். பிரீட்மேன் என்பவர் நிறைய ஆராய்ச்சி செய்து இதை உறுதிப்படுத்தியிருக்கிறார். அவர் செய்த ஆராய்ச்சியிலே என்னவெல்லாம் தெரியவந்துள்ளது என்பது தெரியுமா? பொறுப்பு அதிகம் உள்ளவர்களுக்கும், கண்டிப்பாக உள்ளவர்களுக்கும் இரத்த அழுத்தம் அதிகரித்திருந்த தாம். இரத்த அழுத்தம் தனக்கு அதிகமாக இருக்கிறதென்பதை தெரிந்து கொண்ட்வர்கள் கூட தலைவலி, மயக்கம் (தலைசுற்றல்) அசதி போன்ற உணர்வுகளைப் பெறுகிறார் களாம்.

ஆனால் உண்மை என்னதெரியுமா? இவையெல்லாம் இரத்த அழுத்தத்தாலே ஏற்படுவன அல்ல. இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டுக்குள்ளே இருந்தால் கூட அவர்கள் இப்படி நினைக்கிறார்களாம். இதற்குக் காரணம் மனம் தான் என்கிறார் அவர்.

சிலர் எப்படித் தெரியுமா? ஒருவர் மாரடைப்பால் இறந்து போனார் என்று கேள்விப்பட்டால் போதும்! இறந்து போனதற்குக் காரணம் இதயம் தான் என்கிற பீதி யாலே இதயத் தளர்ச்சி (Cardiac Neurosis) என்கிற மன நோயால் பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் அடிக்கடி தங்களுடைய இதயப் பகுதியைத் தொட்டுப் பார்த்துக் கொள்வார்கள். நாடியைப் பிடித்துப் பார்த்துக் கொள்வார்கள். அடிக்கடி மூச்சை உள்ளுக்கிழுத்துவெளியே விட்டு வலி வருகிறதா என்று பார்த்துக்கொண்டிருப்பார்கள். வேறு எங்காவது வலித்தால் கூட நெஞ்சை வலிக்கிறது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

ஆஸ்துமாவுக்கும் மனதுக்கும் சம்பந்தம் உண்டு. தீர்வு காண முடியாத மனப் போராட்டங்கள் எல்லாவற் றுக்கும் பிறரையே சார்ந்திருக்கிற மனநிலை– என்பன ஆஸ்துமாவின் தீவிரத்தை அதிகப்படுத்தும் பயம், என்ன நடக்குமோ என்கிற பதற்ற நிலை என்பன வெல்லாம் சுவாசித்தலை அதிகரிக்கச் செய்கிறதல்லவா– இதனாலே இரத்தத்தின் காரத்தன்மை அதிகமாகி நோயின் தீவிரமும் அதிகமாகிறது.

மனப் போராட்டம்–மனக்கவலை–மன இறுக்கம் என்பன தோல் வியாதியை (சோரியாஸ்) தூண்டி விடுகிறதாம். இது மாதிரி இன்னும் எவ்வளவோ இருக்கிறது. அதனாலே இன்று நமக்குத் தேவை மனவலிமை! மலர்ந்த முகம்! இவை இரண்டும் இருந்து விட்டால் பலவிதமான நோய்கள் நம்மை நெருங்கவே நெருங்காது!

"டாக்டர் என்னை நெருங்காமல் இருப்பதற்கு நான் ஒரு காரியம் செய்கிறேன்" என்றார் ஒருவர். "என்ன?" என்று கேட்டேன். தினம் ஒரு ஆப்பிள் பழம் சாப்பிடு கிறேன் – An Apple A Day Keeps Doctors Away) என்றார். "என்னை யாருமே நெருங்காமல் இருப்பதற்கு நான் ஒரு காரியம் செய்கிறேன்" என்றார் இன்னொருவர் "அது என்ன?" என்று கேட்டேன். "தினம் ஒரு பூண்டு (உள்ளி) சாப்பிடுகிறேன்" என்றார் அவர். Agarlic A Day Keeps every Body Away'

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இந்தியா, பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கையின் நிலைப்பாட்டுக்கு பகிரங்க ஆதரவு

## மனித உரிமை மாநாடு சாதகமாக அமைந்தது என்கிறார் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

ஐ.நா.மனித உரிமை கவுன்ஸிலின் 7 ஆவது கூட்டத்தொடரின் முதலாவது அமர்வின்போது இந்தியா,



பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகள் இலங்கைக்கு பகிரங்கமாக தமது ஆதரவை வழங்கின. கூட்டத் தொடரில்பங்குபற்றியபெரும்பாலான நாடுகள் எமது நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவமற்றும்மனிதஉரிமைகள் அமைச் சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமான ஐ.நா.மனித உரிமை கவுன்ஸிலின் 7ஆவது கூட்டத் தொடர் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் வானிலை அவதானநிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க மேலும் கூறியதாவது,

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பாக ஹியுமன் ரைட்ஸ் வோர்ச் உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை யாகும். ஜெனீவாவில் மனித உரிமைகவுன்ஸிலின் மாநாடு ஆரம்பமாகும்போது அறிக்கைகளை வெளியிடுவது வாடிக்கையான நிகழ்வாகி விட்டன. இந்த அறிக்கைகள் குறித்து நாம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. இலங்கையின் உண்மையான கள நிலைமைகள் தொடர் பாக நாம் பல்வேறு நாடுகளின் அமைச்சர்கள், தூதுவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறியுள்ளோம்.

ஈரான், நேபாளம், மாலைதீவு, கியூபா, ஸ்லோவாக்கியா, நோர்வே, பிரித்தானியா, இந்தியா, துருக்கி, மொறோக்கோ, கென்யா, சீனா, பாகிஸ்தான், ஜப்பான், கனடா, பின்லாந்து ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் மற்றும் தூதுவர்களுடன் இலங்கையின் களநிலைமைகள், மனித உரிமை களின் நிலைமை குறித்துக் கலந்துரையாடி உள்ளோம்.

இதன்போது, பயங்கரவாதிகளின் பிடியிலுள்ள பகுதிகளை மீட்டு அங்கு மக்களை மீள்குடி யேற்றம் செய்தல் மற்றும் அப்பகுதியில் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்காக தேர்தலை நடத்தியதும் அரசாங்கம் செய்த தவறா என்று அவர் களிடம் கேள்வி எழுப்பினோம்.

எம்முடனான கலந்துரையாடலின் பின்னர் இலங்கையின் உண்மை நிலையை உணர்ந்து கொண்டதாக பல நாடுகளின் தூதுவர்கள் எம்மிடம் தெரிவித்தனர். மனித உரிமை கவுன்ஸிலில் எதிர்காலத்தில் இலங் கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வர யாராவது முயன்றால் இனி ஏனைய நாடுகள் ஒரு முறை யல்ல பலமுறை சிந்திக்கும்.

இதேவேளை இந்தியா, பாகிஸ்தான், ஜப்பான் ஆகிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் இலங்கைக்கான ஆதரவைப் பகிரங்கமாகத் தெரிவித்தன. அரசாங்கத்தின் 13 திருத்தச்சட்ட மூலத்தை அமுல்படுத்தும் யோசனைக்கு ஆதரவளிப்பதாக இந்தியா, மனிதஉரிமை கவுன்ஸிலில் தெரிவித்தது. தனது பிரச்சினையை தானே தீர்த்துக்கொள்ளும் வல்லமை இலங்கைக்கு உள்ளதாக ஜப்பான் அங்கு தெரிவித்தது. பாகிஸ்தானும் எமக்கு ஆதரவாக பலவிடயங் களைக் கூறியது. ஊடகங்களில் வெளிவந்த செய்தி களுக்கு எதிர்மாறாக மனித உரிமை கவுன்ஸிலின் கூட்டத்தொடர் எமக்குச் சாதகமாகவே அமைந்தது. (அ–5)

# அரசும் ஆயுதக் குழுவும் இணைந்து தேர்தலில் போட்டியிட்ட வரலாறு உருவாக்கப்பட்டுள்ளது

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கமும் ஆயுதக்குழுவும் இணைந்து தேர்தலில் போட்டியிட்ட வரலாறு இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியின் ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது. கொழும்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்ததாவது,

இறுதியாக நடந்த அரச தலைவருக்கான தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் புறக்கணிக்கப்பட்டதால் இந்த அரசாங்கம் வெற்றி பெற்றது. அதேபோல் தற்போது கிழக்கிலும் அரசு வெற்றிபெற்றிருக்கிறது. இந்த வெற்றியின் மூலம் பயங்கரவாத ஆயுதக்குழு ஒன்றிடம் கிழக்கின் நிர்வாகத்தை அரசாங்கம் வழங்கியிருக்கிறது. கிழக்கில் நடைபெற்ற இந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நியாயமான தேர்தல் என்று கூறமுடியாது.

ஐக்கியதேசியக்கட்சி இந்த தேர்தலையும் புறக்கணித்தது போல தேர்தல் முடிவுகளையும் நிராகரிக்கிறது. உலகிலேயே முதன் முறையாக அரசாங்கம் ஒன்று ஆயுதக் குழுவுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்ட வரலாறு இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் தன்னிடமுள்ள ஆயுதக் குழுக்களுக்கு மாதா மாதம் மில்லியன் கணக்கிலான பணத்தை வாரி வழங்குகிறது.

இந்த பணத்தைப் பயன்படுத்தியே ஒரு வாக்காளரின் வாக்குச் சீட்டை ஆயிரம் ரூபா வீதம். ஆயுதக் குழுவினர் வாங்கி தேர்தலில் முறை கேடு நடத்தப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி வாக்காளர்களும் கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள்ளனர். கிழக்கில் அமைதியான தேர்தலை நடத்தி முடித்திருப்பதாக அரசு பிரசாரம் செய்கிறது. இந்த பிரசாரம் அனைத்துலகத்தை ஏமாற்றுவதற்கான நடவடிக்கையே ஆகும்.

இந்த தேர்தல் சுயாதீனமாக நடைபெற்றதாக அரசு அறிவித்தாலும் காவல்துறையினர் கூட தமது பணிகளைக் கவனிக்க முடியாத நிலை சில இடங்களில் ஏற்படுத்தப் பட்டிருந்தது. இந்தவொரு நிலைமையில்தான் மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்படவுள்ளது. இதனால் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து நாம் இன்னமும் முடிவு செய்யவில்லை. விரைவில் முடிவு செய்வோம் என்றார். (அ–5)

# இராசிபலன்

13.03.2008

(மாசி 30, வியாழக்கிழமை)

கார்த்திகை முற்பகல் 09.27மணிவரை

சஷ்டி முற்பகல் 11.17 மணிவரை

இராகுகாலம் 01.51-03.21 ம ணிவரை

சுபநேரம்-07.51-09.21 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | வெகுமானம், கௌரவமான நிலை, நல்லமுயற்சி, போசனசுகம். |
| இடபம் | சோம்பல் நிலை, தனவிரயம், சுப செலவு, காரிய இடையூறு. |
| மிதுனம் | தனதானிய சேர்க்கை, தெய்வ தரிசனம், சுபகாரியம். |
| கடகம | பெரியோரால் மதிக்கப்படுதல், இஷ்சித்தி, நன்கொடை. |
| சிங்கம் | அதிகசெலவு, சரீரப்பிரயாசை, கட்டுப்பாடு, நிலைமாற்றம். |
| கன்னி | அஜீரணக் கோளாறு, பொருள் விரயம், காரிய தாமதம், கலகம். |
| துலாம் | மனோதைரியம், அபூர்வசந்திப்பு, நல்ல தகவல், தெய்வதரிசனம். |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி, பகைவர் நேசம். |
| தனுசு | பணக்குறைவு, அஜீரணை ரோகம், காரிய இடையூறு. |
| மகரம் | மனச்சஞ்சலம், தனவிரயம், தெய்வசிந்தை, முயற்சி தாமதம். |
| கும்பம் | நற்கீர்த்தி, தேகநலன், அதிக பிரயாசை, காரிய அனுகூலம். |
| மீனம் | சோம்பல் நிலை, சுபகாரியச் செலவு, கௌரவக்குறைவு. |

வளவன்

# இலங்கை மீனவர் 11பேர் இந்திய கடற்படையால் கைது

(ராமேஸ்வரம்)

இந்தியகடல்எல்லைக்குள்நுழைந்ததாக, 2 விசைப்படகுகளில் இருந்த இலங்கையைச் சேர்ந்த 11 மீனவர்களை இந்திய கடலோர காவல்படை ரோந்துப் பிரிவினர் பிடித்து செவ்வாய்க்கிழமை மண்டபம் முகாமுக்கு அழைத்து வந்தனர்.

இலங்கை கடற்பகுதியில் மீன் பிடிக்கும் இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை பிடித்துச்சென்று சிறையில்அடைத்துவருவதுதொடர்ந்து நடந்துவருகிறது. இந் நிலையில், இலங்கையைச் சேர்ந்த 11 மீனவர்கள் 2விசைப்படகுகளில்காரைக்கால் கடல் பகுதிக்குள் நுழைந்தனர். அப்போது அப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடலோர காவல் படைக்குச் சொந்த மான 'கிட்டூர்சின்னம்மா' என்ற கப்பலில் இருந்த வீரர்கள் இதைக் கண்காணித்து 2 படகுகளுடன் 11மீனவர்களைப்பிடித்து மண்டபம் கடலோர காவல்படை முகாம் தளபதி ஜனார்த்தனிடம் ஒப்படைத் தனர்.

காற்றின் வேகத்தால் படகுகளை கட்டுப்படுத்த முடியாமல் இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்த தாக அவர்கள் தெரிவித்தனர் மீன்துறை அதிகாரிகள் மற்றும் புலனாய்வுத்துறையினர் விசாரணைக்கு பின் அவர்கள் மண்டபம் காவல் நிலைய அதிகாரி சுப்புராஜிடம் ஒப்படைக்கப்பட்டனர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. (அ–5)

# ஆணைக்குழுவுக்கு கூட்டாகப் பதிலளிக்க ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாடு தொடர்பாக தேசிய சம்பள நிர்ணய ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கைக்கான தமது பதில் கருத்துக்களை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கூட்டாக சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளன.

இதற்கமைய பதின்மூன்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர் தொழிற்சங்கங்கள் 'அதிபர், ஆசிரியர் ஒன்றியம்' என்ற பெயரில் இணைந்து தமது பதிலை கூட்டாக சமர்ப்பிக்கவுள்ளன.

எதிர்வரும் 19 ஆம் திகதி தமது அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளை இவ்வொன்றியம் மேற்கொண்டு வருகிறது.

கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஆசிரியர், தொழிற்சங்கங்களிடம் தேசிய சம்பள நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்டது. இதன்போது ஒரு வாரத்தில் இவ்வறிக்கை தொடர்பான பதில் கருத்துக்களை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது.

தேசிய சம்பள நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஒட்டுமொத்தமாக எதிர்த்துள்ளன. எனவே ஆசிரியர் தொழிற்சங்கங்களின் ஒருமித்த கருத்தாக "அதிபர் ஆசிரியர் ஒன்றியம்" என்ற வகையில் தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய சம்பள நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கையை பொருத்தமான முறையில் ஆராய்ந்து கருத்துத் தெரிவிப்பதற்கு கால அவகாசம் தேவையெனவும் எனவே எதிர்வரும் 19 ஆம் திகதி தமது அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தேசிய சம்பள நிர்ணய ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளன. (அ-5)




## பேச்சுத்திறன் காணும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் பாலர்களின் வருடாந்த பேச்சுத்திறன் காணும் வைபவம் 17 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா வகுப்புகள் 15ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ளக பகுதி நேர பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுக்கான நேர்முகப் பரீட்சை சென்ற மாதம் 26,27 ஆம் திகதிகளில் நடைபெற்று அதில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் பதிவாளரினால் அனுப்பப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பதிவுகளை உரிய ஆவணங்களுடன் பரீட்சை அனுமதிக் கிளையில் பதிவு செய்யுமாறு வேண்டப்படுகின்றார்கள். இதற்கான பயிற்சிக் கட்டணமாக ரூபா 12,000 முழுமையாக செலுத்தப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது. இப் பயிற்சியானது 15 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. (ஓ-136)

## சுகவாழ்வு பொது விரிவுரைத் தொடர் III

யாழ்ப்பாணப் பல்லைக்கழகம் புறநிலைப் படிப் புகள் அலகின் ஏற்பாட்டில் சுகவாழ்வு எனும் தலைப்பிலான பொது விரிவுரைத் தொடர் III எதிர்வரும் 15 ஆம்திகதி சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தை மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி க.அருள்மொழி தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விரிவுரையினை யாழ்.போதனா வைத்தியசாலை புற்று நோய் மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமார் "புற்றுநோய்த் தாக்கமும் அதனை எதிர்கொள்ளலும்" எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார்.

ஆர்வமுள்ள பொது மக்கள், பல்கலைக் கழக சமூகத்தினர் வருகை தந்து பயன்பெற முடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (அ)

## பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த பருத்தித்துறை கல்விக் கோட்ட விளையாட்டுப் போட்டி மாவட்டத்தில் பரவலாகப் பெய்யும் மழை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாகவும், இதற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-19)

## இலவச பாடநூல்கள்

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட மருதங்கேணி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கான இலவச பாடப் புத்தகங்கள் பருத்தித்துறைக் கல்விக் கோட்ட அலுவலகத்தில் இருப்பதாகவும் உரியவர்கள் அதனை எடுத்து மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-19)

# கற்கோவளம் புனித நகருக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கற்கோவளம் புனித நகருக்கு மின்சாரம் வழங்குவதற்கான மின் இணைப்பு வேலைகள் இலங்கை மின்சார சபையினால் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாகர்கோயிலிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இவ்விடத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான வீடுகளையும் மற்றும் வசதிகளையும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அமைத்துக்கொடுத்துள்ளன.

நாகர்கோவில் மகா வித்தியாலயம் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் கட்டடங்கள் அமைக்கப்பட்டு இவ்விடத்திலேயே இயங்கி வருவதுடன் மற்றும் முன்பள்ளி மருத்துவ நிலையம், பொதுநோக்கு மண்டபம், சனசமூக நிலையம் ஆகியனவும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. (அ-5)



யா/ அல்வாய் அம்பாள் வித்தியாலய மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா. இரகுநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் வித்தியாலய விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் அரியகுலதேவன், வித்தியாலய அதிபர் அ.தேவச்சந்திரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# சத்துணவு வழங்குமாறு கோரிக்கை

(நயினாதீவு)

நயினாதீவுப் பகுதியில் போஷாக்கு குறைபாடுடையவர்களென இனங்காணப்பட்ட சிறுவர்களுக்கு சத்துணவு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வேலணை பிரதேசத் தலைவரை வலியுறுத்தியுள்ளார்.

நயினாதீவுப் பகுதியில் வசிக்கும் ஐந்து வயதிற்கும் பதினெட்டு வயதிற்கும் உட்பட்ட சிறுவர்களுடைய உடல்நிலை பற்றி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அண்மையில் ஆய்வொன்றை நடத்தினார். இதன்போது 36 சிறுவர்கள் போஷாக்குக் குறைவால் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட இச் சிறுவர்களுக்கு சத்துணவு வழங்க நடவடிக்கை எடுக்கும் படி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வேலணைப் பிரதேச சபை செயலாளரை கேட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (அ-5)

## மஹா கும்பாபிஷேகம்

தென்மராட்சி சாவகச்சேரி அருள்மிகு அமிர்தபார்ஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவாலய மஹா கும்பாபிஷகம் எதிர்வரும் 21ஆம்திகதி சிவப்பிரம்மஸ்ரீ தியாக உமாசுதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கும்பாபிஷேகப் பெருவிழாவின் ஆரம்பக் கிரியைகள் 17,18,19,20 ஆம் திகதிகளில் நடைபெற்று மறுநாள் கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறவுள்ளது. (ஓ-7)

## பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நேற்று புதன்கிழமை வழங்கப்படவிருந்த பாடசாலை உபகரணங்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் நாளை வெள்ளிக்கிழமை வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-19)

## கருத்தரங்கும் செயலமர்வும்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தரம் 11 புதிய பாடத்திட்டத்துக்குரிய சைவநெறிப் பாடக் கருத்தரங்கும், செயலமர்வும் எதிர்வரும் 15, 16ஆம் திகதிகளில் காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை நடைபெறவுள்ளது.

15 ஆம் திகதி சனிக்கிழமை சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களுக்கு மானிப்பாய் ஆசிரியவள நிலையத்திலும், 16 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை உடுவில், தெல்லிப்பளைக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களுக்கு இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள விசேட கல்விப் பிரிவிலும் இக் கருத்தரங்கும், செயலமர்வும் நடைபெறவுள்ளன.

இவ்வாண்டு தரம் 11 இல் சைவநெறி கற்பிக்கும் ஆசிரியர்கள் இதுவரை தங்களால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுப் பத்திரத்துடனும், கைநூலுடனும் இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-7)

## புலமைப் பரிசில் சான்றிதழ் வழங்கும் வைபவம்

காரைநகர் பிரதேச செயலர் பிரிவின் "சிப்தொற" சமுர்த்தி இரண்டாம் நிலைக் கல்வி புலமைப்பரிசில் திட்ட சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.இராஜேந்திரம், வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி தியாகராஜா, மத்திய மகா வித்தியாலய அதிபர் கா.குமாரவேலு, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம், காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் வே.குமாரசுவாமி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சமுர்த்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் க.பொ.த. உயர் தரத்தில் கல்வி கற்கும் வறிய மாணவர்களிற்கு மாதாந்தம் ஐந்நூறு ரூபா வீதம் இருபது மாதங்களிற்கு வழங்கப்படவுள்ள கொடுப்பனவு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட இருபது மாணவர்களிற்கு முதல் ஆறு மாதங்களிற்கான கொடுப் பனவாக மூவாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் கடந்த வருடமும் இதேபோன்று தெரிவு செய்யப்பட்ட இருபது மாணவர்களிற்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-246)

## பரத நாட்டியப் போட்டி 2008

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2008 ஆம் ஆண்டிற்கான பரதநாட்டியப் போட்டி பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்தில் நடாத்தப்படவுள்ளது. நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, பங்குபற்றும் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பப்படிவத்தினை, பிரதேச செயலக கலாசார நிகழ்ச்சித் திட்ட உதவியாளரிடம் பெற்று பூரணப்படுத்தி இம் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித் துள்ளார்.

+ இப்போட்டிகளுக்கு பக்கவாத்தி யங்களும் பாடல்களும் நேரடியாகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

+ குழு நடனத்தில் பங்குபற்றுவோர் கீர்த்தனம் அல்லது ஜதீஸ்வரங்கள் பயன்படுத்தலாம். குழு 6 பேருக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். 14 வயதுமுதல் 18 வயது வரையான ஆண் பெண் இருபாலாரும் பங்குபற்றலாம். நிகழ்வு 10 நிமிடங்களுக்குள் அமைய வேண்டும்.

+ தனி நடனம் – பதம்

இதற்கு 14 முதல் 18 வயதிற்குட்பட்ட இருபாலாரும் பங்குபெறலாம். நிகழ்வு 7 நிமிடங்களுக்குள் அமையவேண்டும். (ஓ)

## குடும்ப அட்டை மீளாய்வு

(மருதங்கேணி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எல்லா கிராமசேவையர் பிரிவுகளிலும் குடும்ப அட்டை மீளாய்வு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-35)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் 14 ஆம்திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு "தெய்வயானை திருமணம்" என்னும் விடயம் பற்றி இளைப்பாறிய அதிபர் பண்டிதர் சி.வேலாயுதம் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## மஹோற்சவம்

(இருபாலை)

நல்லையம்பதி ஸ்ரீமத் நல்லைநாயகி சமேத சட்டநாதன் ஆலய மஹோற்சவம் நேற்றுக் காலை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது.

விழாவில் 17 ஆம் திகதி மாலை 5 மணிக்கு கைலாசவாகனமும், 19 ஆம் திகதி மாலை 5மணிக்கு பெரிய சப்பைரத விழாவும், 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும், 21 ஆம் திகதி வெள்ளி பங்குனி உத்தரத்தில் தீர்த்தமும் மாலைகொடியிறக்கமும் இடம்பெறும். (ஓ-136)

# இலங்கையில் பொதுமக்களின் நிதி வெட்கக்கேடான வகையில் விரயம்

## வர்த்தகச் சஞ்சிகை கருத்துக்கணிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பொதுமக்களின் நிதி வெட்கக்கேடான வகையில் விரயமாக்கப்படுகின்றது என நாட்டு மக்கள் அனைவரும் ஏக மனதாகத் தீர்ப்பளித்துள்ளனர். வியாபார சஞ்சிகையான எல்.எம்.டி நடத்தியிருக்கும் கருத்துக்கணிப்பிலேயே மக்கள் இவ்வாறானதொரு தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

லண்டனுக்குச் சுற்றுப்பிரயாணம் சென்றாலோ அல்லது நியூயோர்க்கின் ரிட்ஸ் கர்ல்போனில் குழுவொன்றுடன் தங்கினாலோ அவற்றை எவ்வாறு சரிப்படுத்துவதென்று எமது ஆட்சியாளர்களுக்குத் தெரியும். வரி செலுத்துபவர்களின் மூலமே அந்தச் செலவுகள் சரிசெய்யப்படுகின்றன என்று எல்.எம்.டி.சஞ்சிகையின் மார்ச் 7 ஆம் திகதி பதிப்பில் வெளியாகியிருக்கும் கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான வீண் செலவீனங்களை எவ்வாறு கட்டுப்படுத்தலாமென அந்தக் கருத்துக் கணிப்பில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்திருப்பவர்களில் பெரும்பாலானவர்கள். வர்த்தக சமூகத்தினரால் இதற்கான நடவடிக்கை எடுக்க முடியுமெனக் கூறியுள்ளனர். பொதுமக்கள் நிதி வீணடிக்கப் படுவதற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் வர்த்தக சமூகத்தினரும் இணைந்துகொள்ள வேண்டுமென சிலர் கூறியுள்ளனர்.

கருத்துக்கணிப்பில் கலந்துகொண்டவர்களில் அரைவாசிப்பேர் பொதுமக்கள் பணம் விரயமாக்கப்படுவதில் வர்த்தக சமூகத்தினரின் பங்களிப்பு இல்லையெனக் கருதுகின்றனர். எனவே, பொதுமக்கள் இதற்கு எதிராக கடுமையாகக் குரல் கொடுக்க வேண்டும். பணம் அரசாங்கத்தால் விரயமாக்கப்படுகின்றமை தொடர்பாக கவனம் எடுக்காமை குறித்து சிலர் தம்மீதே எரிச்சலை வெளிப்படுத்தியுள்ளனர் என அந்த சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் நிதி விரயமாக்கப்படுவதற்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் எந்தவிதமான மாற்றமும் ஏற்படப்போவதில்லையென கருத்துக்கணிப்பில் வாக்களித்திருக்கும் 45 வீதமானவர்கள் கூறியுள்ளனர். செயற்திறன் குறைந்த வகையில் அரசாங்கத் திணைக்களங்களில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளும் பொதுமக்களின் நிதி விரயமாக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளதுடன் 80 வீதமான அரசாங்க அதிகாரிகள் இதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் என அந்தக் கருத்துக் கணிப்பில் பொதுமக்கள் கூறியுள்ளனர். (அ-5)

# ஜனநாயகத்தின் மீதான மக்களின் ஆர்வத்தை கிழக்கின் தேர்தல் வெளிக்காட்டுகின்றது

## அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா கருத்து

(கொழும்பு)



கிழக்கில் பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததன் மூலம் நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்தி அபிவிருத்தியை நோக்கி அரசாங்கம் பயணித்துக்கொண்டிருப்பதாக தகவல் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் தேர்தல் முடிவுகள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் மேலும் கூறியுள்ளதாவது.

கிழக்கில் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு பொதுமக்கள் பெருமளவில் ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இதனை உறுதி செய்துள்ளது.

இந்தத் தேர்தல் நடைபெறுவதற்குரிய சாதகமான சூழ்நிலை அந்த மாவட்டத்தில் இருக்கவில்லையென ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டிருந்தது. அத்துடன், இந்தப் பிரதேசத்தில் ஆயுதக் குழுக்கள் இருப்பதாகவும் அக்கட்சி குற்றம் சாட்டியிருந்தது. ஆனால், இந்தத் தேர்தலின் 59.7 சதவீதமான மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்துள்ளனர். இது ஐக்கிய தேசியக்கட்சியின் கூற்றை நிராகரித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்தத் திட்டத்திற்கு ஆதரவளிக்கும் அனைத்து மக்களுக்கும் தான் நன்றி தெரிவிப்பதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# மனித உரிமைகள் தொடர்பில் மேற்குலகின் கரிசனைக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் விளைவு பாதகமாகும்

## நியூயோர்க் ரைம்ஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

மேற்குலகத்தின் மனித உரிமைகள் தொடர்பிலான கரிசனைகளுக்கு இலங்கை அரசு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இதனால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்று நியூயோர்க் ரைம்ஸ் நாளேடு எச்சரித்துள்ளது.

நியூயோர்க் ரைம்ஸ் நாளேட்டில் வெளியாகியுள்ள கட்டுரை விபரம்,

கடந்த 25 ஆண்டுகளாக இந்து சமுத்திரத்தின் குட்டித்தீவில் நிலவிவரும் அழுக்கான போரினால் உலக நாடுகள் பல தமது கரங்களால் இந்தத் தீவை பற்றிப் பிடித்துக்கொள்ள முயற்சித்துள்ளன.

உலகெங்கிலும் வசித்து வரும் புலம்பெயர் தமிழர்கள் பிரிவினைவாத பயங்கரவாதிகளுக்கு மிக முக்கிய நிதியுதவிகளை வழங்கி வருகின்றனர்.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வழங்கப்பட வேண்டிய நிதியுதவியே இவ்வாறு வழங்கப்படுகிறது. அரசாங்கம் போரினை முன்னெடுப்பதற்கு வெளிநாட்டுச் சக்திகளின் உதவிக்கரங்களை எதிர்பார்த்துள்ளது.

சீனாவினால் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படும் உதவிகள் காரணமாக இந்தியாவை புறக்கணிக்கக்கூடிய ஒரு நிலையும் மனித உரிமைகள் தொடர்பான அனைத்துலகத்தின் கருத்துக்களை அலட்சியம் செய்யக்கூடிய ஒரு போக்கும் தற்போது காணப்படுகிறது.

5 ஆண்டுகாலமாக நீடித்த போர் நிறுத்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முன்நகர்வுகளில் சில வெற்றிகளை இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளது.

இந்த போர் முன்நகர்வுகளின் மூலம் மனித உரிமைகள் மீறப்படுவதாக இலங்கைக்கு எதிராக பரவலாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

இதனால் அமெரிக்கா உள்ளிட்ட சில முக்கி வழங்குநர்களிடமிருந்து போர் ஆதரவு மறுக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் இலங்கையில் கடத்தல்களோ அல்லது ஊடக அடக்குமுறையோ இடம்பெறவில்லை என்று தெரிவிப்பதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர்.

சிறு சிறு சம்பவங்களைத் தவிர பாரியளவிலான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்று வெளிக்காட்டிக்கொள்ள முற்படுகின்றனர்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் முக்கியமாக அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் கனடா போன்வற்றிடம் கோரப்படும் உதவிகளை மட்டுப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் இதற்குப் பதிலாக கிழக்கு நாடுகளின் உதவிகளைக் கோர உள்ளதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோகன்ன தெரிவித்துள்ளார்.

புதிய உதவி வழங்குவோர் அண்டை நாட்டவர்கள் அவர்கள் வித்தியாசமான அணுகு முறைகளைக் கொண்டவர்கள். ஆசிரியர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் மற்றவர்களுக்கு கற்பித்துக்கொடுக்க மாட்டார்கள் தொடர்புகளைப் பேணுவதில் சில முறைகள் உள்ளன. சில வேளைகளில் ஒரு சிறிய கலந்துரையாடல் அதனை விடுத்து இதை இப்படிச் செய்ய வேண்டும் என்று புதிய உதவி வழங்குவோர் சுட்டிக்காட்ட மாட்டார்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற வகையைச் சார்ந்தோர் என்பதை அவர்களே உறுதிப்படுத்திக் கொண்டுள்ளனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் கனடா போன்ற நாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கமாகவே நோக்கப்படுகிறது. இந்த நிலைமை அவர்களது நிதி திரட்டல் நடவடிக்கைகளுக்கு மிகவும் பாதகமான சூழ் நிலையைத் தோற்றுவிக்கும் .

இதேவேளை, சீனா இலங்கைக்கு உதவிகளை பல மடங்கு அதிகரித்துள்ளது. சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை சீனா அரசாங்கம் இலங்கைக்கு கடந்த ஆண்டு வழங்கியுள்ளது. இலங்கையின் பிரதான உதவி வழங்கும் நாடான ஜப்பானை விஞ்சுமளவிற்கு சீனா நேசக் கரம் நீட்டியுள்ளது.

பெருந்தெருக்களை அமைத்தல் இரண்டு மின் உற்பத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மஹிந்தவின் சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் துறைமுகம் ஒன்றை நிர்மாணம் செய்தல் போன்ற பணிகளுக்கு சீனா அர சாங்கம் உதவிகளை வழங்கியுள்ளது.

சீனாவிடமிருந்தும் சீனா ஒத்துழைப்பு நாடான பாகிஸ்தானிடமிருந்தும் இலங்கை ஆயுதக் கொள்வனவையும் மேற்கொள்கிறது.

தெற்காசியப் பிராந்தியத்தில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்துவதன் மூலம் நன்மையடைவதே சீனாவின் முக்கிய தந்திரோபாயமாகக் கருதப்படுகிறது.

இந்தியா மீதே சீனா அதிக கரிசனை காட்டுகின்றது. இலங்கையின் போர் முன் நகர்வுகளின் போது நேரடியான இந்தியாவின் உதவி இந்தியாவில் இருக்கும் தமிழர்களை ஆத்திரமூட்டக்கூடும்.

மறுபுறத்தில் இலங்கை அரசாங்கம் மீது மேற்கொள்ளப்படும் அழுத்தங்கள் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நேசக்கரத்தை மேலும் வலுப்படுத்தும் என்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையை இந்தியா எதிர்கொண்டுள்ளது.

இலங்கைப் பிரச்சினை தொடர்பான இந்தியாவின் பங்களிப்பு தொடர்பில் மிகக்குறைந்த வாய்ப்புக்களே உள்ளன என்று இலங்கைக்கான இந்திய அமைதிகாக்கும் படையின் முன்னாள் தளபதி ஜெனரல் அசோக் குமார் மேத்தா தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் இலங்கைக்கான உதவிகளும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சுமார் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை இந்திய அரசாங்கம் உதவி வழங்கியுள்ளது. இலங்கையில் நிலக்கரி மின் நிலையமொன்றை அமைக்கும் பணிகளை இந்தியா ஆரம்பித்துள்ளது. இந்திய தகவல் தொழில் நுட்பத்துறை முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு துறையிலும் முதலீடு செய்யுமாறு இந்திய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது. வோசிங்டனைப் போன்றே புதுடில்லியும் இலங்கைக்கான நேரடியான இராணுவ உதவிக் கதவுகளை மூடியுள்ளது.

எனினும் தமது புத்திசாதுரியமான இராஜதந்திர முன்நகர்வுகளின் மூலம் மறைமுகமான இராணுவ உதவிகளை வழங்க முடியும். குறிப்பாக கடற்பரப்பில் மேற்கொள்ளப்படும் ஆயுதக் கடத்தல்களை தடுப்பதன் மூலம் இதனை மேற்கொள்ளலாம்.

20 ஆண்டுகளுக்கு முன்னர் பிராந்தியத்தின் அதிகாரப் பலம் இந்தியாவை மையமாக வைத்தே காணப்பட்டது. எனினும் தற்போது இந்தியாவின் பின்வழியாக சீனாவும் தனது காத்திரமான பங்களிப்பின் மூலம் தன்னை நிலைப்படுத்திக்கொள்ளத் தொடங்கியுள்ளது.

இந்திய துணைக்கண்டத்திற்கு அண்டைய நாடுகளின் துறைமுக வழிகள் தொடர்பாக ஒரு பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ள சீனா அதிக முனைப்புக் காட்டுவதாக சிங்கப்பூரின் நேங் யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் அனைத்துலக உறவுகளுக்கான பேராசிரியர் சீ.ராஜா மோகன் சுட்டிக்காட்டுகிறார்.

இந்து சமுத்திரத்தின் முக்கிய பாத்திரமாக தன்னை நிலைப்படுத்திக்கொள்வதில் சீனா அதிகசிரத்தை காட்டிவருவதாக அவர் மேலும் குறிப்பிடுகிறார்.

இதன் மூலம் இலங்கை போன்ற நாடுகளுக்கு அதிகமான வாய்ப்புகள் கிட்டியுள்ளன.

தற்போது பல சிறிய நாடுகள் இந்தியாவின் தந்திரோபாயங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்த சீனாவை ஒரு பகடைக்காயாக பயன்படுத்துகின்றன. இதன் மூலம் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் மூடி மறைக்கப்படுகின்றன என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்திற்கான தெற்காசிய ஆய்வாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

1990 களில் பர்மாவில் ஜனநாயகம் நிலைநிறுத்தப்படவேண்டும் என்பதில் இந்தியா அதிக கவனம் எடுத்துக்கொண்டது. சீனாவின் இராணுவ நிர்வாகம் குறித்து உன்னிப்பாக அவதானித்து வந்தது. தற்போது இலங்கை தொடர்பான சீனாவின் நிலைப்பாடு குறித்து மிக கரிசனை காட்டிவருகின்றது.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் அதிகாரம் தொடர்பான கரிசனையாகவே இதனை ஆய்வாளர் மீனாட்சி கங்குலி விதந்துரைக்கின்றார்.

இந்த வரிசையில் அண்மைய போட்டியாளராக ஈரானைக் குறிப்பிடலாம். கடந்த வருட இறுதிப் பகுதியில் இலங்கைக்கு 1.6 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகளை ஈரான் வழங்கியுள்ளது.

அடிப்படையாக ஈரானிய எண்ணெய் வளத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே இந்த கடனுதவியை ஈரான் வழங்கியுள்ளது. எனினும் அமெரிக்காவின் உதவிகள் கிடைக்காமை குறித்து இலங்கை மிகுந்த வருத்தத்துடனேயே காணப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கள் கண்காணிப்பகத்தை இலங்கையில் நிறுவுவதற்கு அமெரிக்க அழுத்தங் கொடுத்ததன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் மனக்கசப்பு நிலவுகிறது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளர் லூயிஸ் ஆர்பரின் அண்மைய இலங்கைப் பயணத்தின் போது நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால் இலங்கை அரசாங்கம் ஆத்திரமடைந்தது. ஜெனீவாவிற்கான இலங்கை பிரதிநிதியூடாக வெளியிடப்பட்ட கண்டன அறிக்கைகள் ஊடகங்களில் வெளியாகின.

அரசாங்கத்திற்கு சார்பான தி.ஐலன்ட் நாளேட்டின் ஆசிரியர் தலையங்கமொன்றில் மிகக்கடுமையாக இந்த விவகாரம் விமர்சிக்கப்பட்டிருந்தது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இலங்கையில் நிகழும் காணமற் போதல்களுக்கு அரசாங்கமே பொறுப்பு சொல்ல வேண்டும் எனத் தெரிவித்திருந்தது.

அதே நாளில் அனைத்துலக சுயாதீன ஆணைக் குழுவினரும் தமது பணிகளை இடைநிறுத்திக்கொள்வதாக அறிவித்திருந்தனர். போதியளவு ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை அந்த அமைப்பு முன்வைத்திருந்தது.

எனினும் சட்ட மா அதிபர் திணைக்களம் வேறு நபர்களைக் கொண்டு இந்த ஆணைக் குழுவை மீண்டும் நிறுவுவதற்கு திட்டமிட்டிருப்பதாக தெரிவித்திருந்தது.

மேற்குலகத்தின் மனித உரிமைகள் தொடர்பான கரிசனைகள் குறித்து அவ்வளவு முக்கியத்துவம் தற்போது காட்டுவதில்லை. எனினும் இந்த நிலைமை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

அரசாங்கத்தின் இந்த துணிகரமான செயல் நாட்டின் பொருளாதாரத்தை மிக மோசமாக பாதிக்கும் ஏற்கனவே பணவீக்கம் மிக உயர்ந்த நிலையில் காணப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் சில வலுவான அனைத்துலக சக்திகளின் நன்மதிப்பை இழந்து வருகின்றது. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தக முன்னுரிமை இந்த ஆண்டுடன் முடிவுக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

எனினும் சீனா எவ்வளவு காத்திரமான பங்களிப்பை வழங்கிய போதிலும் இன்னமும் இலங்கையின் பிரதான வர்த்தக மையங்களாக ஐரோப்பிய நாடுகளே திகழ்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை என்று சொமினி சென்குப்தா தெரிவித்துள்ளார். (அ-5)

# பிரித்தானியா - பிரான்ஸை உலுக்கும் புயல் அனைத்து போக்குவரத்துக்களும் பாதிப்பு

(லண்டன்)

ரென்னெஸ், லண்டன் மற்றும் வடக்கு பிரான்ஸை தாக்கிய அட்லாண்டிக் சமுத்திர புயல் காரணமாக 2 பேர் கொல்லப்பட்டதுடன் விமான, கப்பல் மற்றும் புகையிரத போக்கு வரத்துகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் 41 விமான சேவைகளும் கட்விக்கில் 13 விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட் டன.

பிரான்ஸில் படகொன்று பாரிய அலை யால் கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 26 வயது இளைஞர் மரணமடைந்துள்ளார். அவ ருடன் மேற்படி படகில் பயணம் செய்த பிறி தொரு இளைஞர் அருகில் பயணித்துக் கொண்டிருந்த படகுகளிலிருந்தவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

மேலும் வட மேற்கு பிரான்ஸில் நோர்மண்டி யின் தெற்கேயுள்ள செயின்ட் டெனிஸ் லி பெர் மென்ட் எனும் இடத்தில் கார் ஒன்றின் மீது மரமொன்று சரிந்து விழுந்ததில் அதில் பயணம் செய்த பெண் ஒரு வர் பலியாகியுள்ளார்.


பிரித்தானியாவில்

மேலும் மணிக்கு 110 கிலோ மீற்றரிலும் அதிக மான வேகத்தில் வீசிய இப் புயல் காரணமாக பிரிட்டனில் கடற்கரையின் வடக்கே யுள்ள செயின் பிரியுக் துறை முகத்தில் நிறுத் தப்பட்டிருந்த மீன் பிடிப்படகொன்று மூழ்கியது.


பிரான்ஸில்

அத்துடன் புய லின் வேகத்தால் லெஸ்சப்லெஸ் டியொலோன் கடற் கரைப் பகுதியில் அர்டெமிஸ் எனும் சரக்குக் கப்பல் கரையொதுங்கி யுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இப்புயல் காரணமாக தென் பிரித்தானி யாவில் மரங்கள் பலவும் வேருடன் சாய்ந் துள்ளதுடன் வீடுகளின் கூரைகளும் தூக்கி எறியப்பட்டுள்ளன. மேலும் அங்கு சுமார் 10,000 வீடுகள் மின்சாரத்துண்டிப்புக்கு இலக்காகி யுள்ளதாக கூறப்படுகிறது.

அத்துடன் 13 கப்பல் ஊழியர்களுடன் பய ணித்த கப்பலொன்றை மீட்கும் பணியில் பிரித் தானிய கடற்படை உத்தியோகத்தர்கள் ஈடு பட்டுள்ளனர். (அ-5)

## முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா ஆஸ்பத்திரியில் அனுமதி

வங்களாதேசத்தின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா இவர் ஒரு தொழில் அதிபரிடம் தொழில் தொடங்க அனுமதி தருவதற்கு பணம் கேட்டு மிரட்டியதாக கூறப்பட்ட புகாரின் பேரில் கைது செய்யப்பட்டார். அவர் கடந்த ஜுலை மாதம் முதல் பாராளுமன்ற வளாகத்தில் உள்ள ஒரு கட்டடத்தில் அடைத்து வைக்கப்பட்டு இருக் கிறார்.

இதன் பிறகு அவர் உடல் நலம் பாதிக் கப்பட்டு இருக்கிறது. அவரை வெளிநாட்டுக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்காவிட் டால் அவர் காது கேட்காமல் போய்விடும் என்று டாக்டர்கள் சமீபத்தில் அரசுக்கு அறிக்கை கொடுத்தனர். அவரும் அமெரிக்கா சென்று சிகிச்சை அளிக்க அனுமதி தருமாறு அரசாங் கத்திடம் கேட்டார். இதற்கு அரசாங்கம் இது வரை அனுமதி அளிக்கவில்லை. இந்த நிலை யில் அவர் நேற்று முன்தினம் டாக்காவில் உள்ள ஒரு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட் டார். அடைத்து வைக்கப்பட்டு இருந்த இடத் தில் இருந்து பலத்த பாதுகாப்புடன் ஆஸ்பத் திரிக்கு கொண்டுவரப்பட்டார்.

இதே ஆஸ்பத்திரியில் தான் கடந்த மாதம் அவர் கண் மற்றும் காது நோய்களுக்காகவும் அதிக ரத்த அழுத்த நோய்க்காகவும் சிகிச்சை பெற்றார். (அ-5)

## தென்கொரியாவின் முதலாவது விண்வெளி வீரராக பெண் பொறியியலாளர் தெரிவு

தென்கொரியாவின் முதலாவது விண் வெளி வீரர் என்ற பெருமையை அந் நாட்டு பெண் பொறியியலாளர் ஒருவர் பெறவுள்ளார்.

யி ஸோ- யி யோன் என்ற இந்த 23 வயது தென்கொரிய பொறியிலாளர் எதிர்வரும் ஏப் ரல் மாதம் ரஷ்ய விண்கலத்தில் சர்வதேச விண் வெளி நிலையத்திற்கான பயணத்தை மேற் கொள்ளவுள்ளார்.

ஏற்கனவே மேற்படி விண்வெளி பயண த்தை மேற்கொள்ள தெரிவு செய்யப்பட்ட தென்கொரிய ஆண் விண்வெளி வீரரான கோசான் (31 வயது) ரஷ்ய விண்வெளி முகவர் நிலையத்தின் பயிற்சி விதிகளை மீறியதை யடுத்து அவரது இடத்திற்கு யியோன் நியமிக் கப்பட்டுள்ளார்.

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல் வதற்காக விண்ணப்பித்த 36 ஆயிரம் பேர் மத்தியிலிருந்து தெரிவாகிய கோசான் பயிற்சி விதிகளை உரிய முறையில் பின்பற்ற வில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகிய நிலை யில் சாதாரண பின்னணியிலிருந்து செயற் படும் விண்வெளிவீரராக கடமையாற்ற



வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஏனைய ரஷ்ய விண் வெளி வீரர்களுடன் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல்லும் யி ஸோ-யியோன் 8 நாட்கள் தங்கியிருந்து அங்கு தொடரான விஞ்ஞான பரிசோதனைகளை மேற்கொள் ள வுள்ளார். இவ்விண்வெளி பயணத்தின் மூலம் விண்வெளிவீரரை விண்ணுக்கு அனுப்பி வைத்த ஆறாவது ஆசிய நாடு என்ற பெரு மையை தென்கொரியா பெறுகிறது. (அ-5)

## ஆடைக்குள் மறைந்திருப்பதை அம்பலப்படுத்தும் புகைப்படக்கருவி

உடைக்குள் மறைத்து வைக்கப் பட்டிருக் கும் வெடிபொருட்கள், போதைப் பொருட்கள் மற்றும் அயுதங்களை 25 மீற்றர் தொலை விலிருந்தே கண்டறியும் அதிநவீன புகைப் படக்கருவி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

துறூவிஸன் சிஸ்டம் எனும் இந்தப் புகைப் பட தொழில்நுட்பத்தை விமான நிலை யங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் ஏனைய பொது இடங்க ளில் நிறுவி பெரும் பயனைப் பெற முடியும் என தெரி விக்கப்படுகிறது.



இறக்கும் நட் சத்திரங்கள் குறித்து ஆராய விண் வெளி ஆராய்ச் சியாளர்களால் பொதுவாக பயன்படுத்தப் படும் ரெராஹேர்ட்ஸ் அல்லது ரி-ரே தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டே இப் புகைப்படக்கருவி உருவாக் கப்பட்டுள்ளது.

இப்புகைப்படக் கருவியைப் பயன்படுத்தி ஆடைக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ள பொருட்களைக் கண்டறிய முடிகின்ற போதும் ஒருவரது உடலமைப்பு தொடர்பான விபரங்களை இக்கருவி வெளிப்படுத்தாது எனக் கூறப்படுகிறது. அத்துடன் தீங்கு விளை விக்கக்கூடிய கதிர்த்தொழிற்பாடும் இக்கருவியில் பயன்படுத்தப்படவில்லை என மேற்படி புகைப்படக்கருவியை வடிவமைத்த விஞ்ஞா னிகள் தெரிவிக்கின்றனர்.

எடுத்துச் செல்லப்படக்கூடிய இலகு தன்மையுடன் அமைந்த இப்புகைப் படக் கருவி லண்டனிலுள்ள துபாய் மோர்கன் டைல் எக்ஸேஞ்ச் மற்றும் கனரி வார்ப் ஆகிய நிறு வனங்களுக்கு விற்கப்பட்டுள்ளதாக கூறப் படுகிறது.

இப்புகைப்படக்கருவியானது இவ்வார இறுதியில் லண்டனில் நடைபெறும் உள் நாட்டு அலுவலகத்தின் விஞ்ஞான அபி விருத் திப் பிரிவின் வருடாந்த கண்காட்சியில் காட் சிக்கு வைக்கப்படவுள்ளது.

மேற்படி புகைப்படக்கருவியை உருவாக் கிய நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் இது தொடர்பில் விபரிக்கையில் அனைத்து மனி தர்களிடமிருந்தும் தாழ்ந்த மட்ட மின்காந்த கதிர்ப்பு வெளியேற்றப்படுகிறது. இக் கதிர்ப் பானது உடைகள், கடதாசி, மட்பாண்டம் மற் றும் மரப்பலகை என்பவற்றை ஊடுருவி செல்லக்கூடியது. ஆனால் உலோகம் மற்றும் நீரை அது ஊடுருவிச் செல்ல முடியாது. இந் நிலையில் எமது புகைப்படக் கருவியானது மனிதர்க ளிட மிருந்து வெளியேற்றப்படும் கதிர்ப்புகளைச் சேகரித்து அதிலிருந்து ஆடை யினுள் உள்ள பொருளின் உருவத்தை திரை யிட்டு காண்பிக்கும் என்று தெரிவித்தார். (அ-5)

# பெனாசீர் கட்சியில் பிளவு ஏற்பட்டால் சர்தாரிக்கு ஆதரவாக இருப்போம்

## நவாஸ் ஷெரீப் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பெனாசீரின் கட்சியான மக்கள் கட்சியில் பிளவு ஏற்பட்டாலோ அல்லது அதற்கு வெளி யில் உள்ள சக்திகள் அதை உடைப்பதற்கு முயற்சி செய்தாலோ அதன் இணைத் தலைவர் சர்தாரிக்கு ஆதரவாக நாங்கள் இருப் போம் என்று முஸ்லிம் லீக் கட்சி தலைவர்


நவாஸ் ஷெரீப் அறிவித்து இருக்கிறார்.

பாகிஸ்தான் தேர்தலில் அதிக இடங் களில் வெற்றி பெற்று இருக்கும் மக்கள் கட்சி நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சியுடன் கூட்டு சேர்ந்து ஆட்சி அமைக்க இருக்கிறது. மக்கள் கட்சியை சேர்ந்த ஒருவர் பிரதமராக வருவதற்கு முஸ்லிம் லீக் கட்சி ஆதரவு தெரி வித்துள்ளது.

மக்கள் கட்சியின் துணைத்தலைவரான மக்தூம் அமீன் பாகிம் தான் பிரதமர் பத விக்கு அறிவிக்கப்படுவார் என்று முன்பு கூறப்பட்டு வந்தது. பிறகு தானே பிரதமராக வேண்டும் என்று ஆசைப்பட்ட சர்தாரி தான் பிரதமராக வரவேண்டும் என்றால் அமீன் பாகிமை பிரதமராக நியமிக்கக்கூடாது என்று சர்தாரி முடிபு எடுத்தார். பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த ஒருவரை தற்காலிகமாக பிரதமர் பதவியில் அமர்த்தலாம் என்று அவர் முடிபு எடுத்தார். இதனால் அமீன் பாகிமுக்கு சர்தாரி மீது கசப்புணர்வு ஏற்பட்டது. பிரதமராக பாகிம் நிய மிக்கப்படாவிட்டால் அவர் கட்சியை உடைத் துக் கொண்டுவெளியேவருவார்என்று கூறப்படு கிறது.

**சதியை முறியடிப்போம்**

இந்த நிலையில் கட்சியை உடைப்பதற்கு அரசாங்கத்தில் உள்ள சில சக்திகள் முயற்சி செய்து வருவதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன. அந்த சக்திகள் மக்கள் கட்சி எம். பிக்களில் ஒரு சிலரை அமீன் பாகிம் ஆதர வாளர்களாக மாற்ற முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றன என்றும் செய்திகள் வெளியாகின. இதைத் தொடர்ந்து தான் நவாஸ் ஷெரீப் சர்தாரிக்கு ஆதரவாக இருப் போம் என்று அறிவித்து இருக்கிறார் .அவர் இது தொடர் பாக கூறி இருப்பதாவது,

மக்கள் கட்சியை உடைப்பதற்கு அரசாங் கத்தில் உள்ள சில சக்திகள் சதி செய்கின் றன. இந்த சதியை வெற்றி அடையவிடாமல் முறியடிப்போம். பாராளுமன்றத்திலும் வெளி யிலும் மக்கள் கட்சிக்கு முழு ஆதரவு கொடுத்து அந்த சதியை முறியடிப்போம். இவ்வாறு நவாஸ் ஷெரீப் தெரிவித்தா்ா.

முஸ்லிம் லீக் கட்சியுடன் உடன்பாடு செய்து கொண்டது மக்கள் கட்சிக்கு மிகப் பெரிய பலத்தை கொடுத்து உள்ளது என்றும் அந்த கட்சியில் தன் செல்வாக்கை சர்தாரி உயர்த்திக்கொள்ள அது உதவியுள்ளது என்றும் அரசியல் வட்டா ரத்தில் கூறப்படுகிறது. (அ-5)

## துபாயில் வரலாறு காணாத விபத்தில் 10 பேர் பலி

(துபாய்)

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் துபாய் - அபுதாபி நெடுஞ்சாலையில் பனி மூட்டமாக இருந்ததால் எதிரே வரும் வாகனங்கள் தெரி யாமல் ஒன்றின் மீது ஒன்று என்று 150கார் கள் மோதிக்கொண்டன. இதில் 10 பேர் பலி யானார்கள் 40 பேர் காயம் அடைந்தனர். 80க்கும் மேற்பட்ட கார்கள் அடையாளம் தெரியாத அளவுக்கு சேதம் அடைந்தன. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டு வரலாற்றில் இது தான் மோசமான விபத்து ஆகும்.

ஹெலிகாப்டர்கள் ஆம்புலன்ஸ்கள் ஆகி யவை சம்பவ இடத்துக்கு விரைந்தன. மீட்பு குழுவினர் விரைந்து பணியாற்றி காயம் அடைந்தவர்களை மீட்டு அவர்களை ஆஸ் பத்திரிகளில் சேர்த்தார்கள். (அ-5)

# மேலதிக மாவட்ட பதிவாளர் பதவி 100 பட்டதாரிகள் நியமனம் !

மேலதிக மாவட்ட பதிவாளர் பதவிகளுக்காக 100 பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர். அண்மையில் இதற்கென நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய இவர்கள் பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

இந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த இரு வாரங்களுக்குள் வெளியிடப்படவுள்ளதாக பதிவாளர் நாயகம் ஜி.எம்.குணசேகர தெரிவித்துள்ளார்.

பிறப்பு, இறப்பு மற்றும் மரணச் சான்றிதழ்களை பதிவு செய்யும் பணிகள் இந்த உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்படும். தற்போது பிரதேச செயலாளர்களே இந்தக் கடமையை செய்து வருகின்றனர். புதிதாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ள உத்தியோகத்தர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைப்பதன் மூலம் மக்களுக்கு விரைவான சேவையை வழங்க முடியும் என பதிவாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

காணிப் பதிவு உள்ளிட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தின் தேவைகள் விரைவுபடுத்தப்படவுள்ளன. நாட்டில் உள்ள காணிப்பதிவாளர்களுக்கு அண்மையில் ஒருநாள் செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது. கேகாலை, குருநாகல், குழியாப்பிட்டி, நுவரேலியா ஆகிய இடங்களில் உள்ள காணிப் பதிவாளர் காரியாலயங்களில் ஒரே நாளில் காணிகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

நீர்கொழும்பு, கம்பகா, அவிசாவளை ஆகிய பகுதிகளில் உள்ள அலுவலகங்களிலும் சேவைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. தெகிவளை,கல்கிசை, காணிப்பதிவாளர் அலுவலகம் நுகெகொடை, தெல்கந்த பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட இருப்பதாக ஜி.எம். குணசேகர தெரிவித்துள்ளார். (அ-7)

# சரக்கு கப்பல்களை புலிகள் கடத்துவார்களாம் ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரிகள் கருத்து

(தூத்துக்குடி)

சேதுதிட்ட கால்வாய் வழியாக செல்லும் சரக்கு கப்பல்களை விடுதலைப் புலிகள் கடத்தும் பேராபத்து உள்ளது என ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரிகள், அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடியில் சேது கால்வாய் திட்டம் தொடர்பாக ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரிகள் கமாண்டர் ஜோண் ஜேக்கப், கப்டன் பாலகிருஷ்ணன், அறிஞர்களான லால்மோகன், ஜீவா ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

சேதுகால்வாயில் வரும் சரக்குக் கப்பல்களை விடுதலைப் புலிகள் எளிதில் கடத்திச் செல்லும் நிலை உருவாகும். மேலும் நமது நாட்டின் பாதுகாப்பிற்கும் பேராபத்து ஏற்படும். சேது கால்வாயில் செல்லும் கடற்படைக் கப்பல் கள் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் நேராக மட்டுமே செல்ல முடியும். இடையில் எங்கும் திரும்ப முடியாது. அதன்படி கால்வாயின் ஒருமுனையில் நுழைந்து மறுமுனையில் வெளிவரும் போது எதிரிகள் நமது போர்க் கப்பலை எளிதில் தாக்கி அழித்து விடுவர். எனவே சேதுகால்வாயை இந்திய கடற்படை கடலோரக் காவல் படையினர் பயன்படுத்த மாட்டார்கள். மேற்கண்ட உண்மைகளை மத்திய அரசிடம் எடுத்துக் கூறினாலும் அது செவி சாய்க்காமல் அரசியல் ஆதாயத்திற்காக அவசர கோலத்தில் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

மக்களின் வரிப்பணத்தை ரூபா 4 ஆயிரம் கோடி வரை வீணடிக்கும் சேது திட்டத்தை மத்திய அரசு கைவிடவேண்டும். சேது திட்டம் குறித்து உயர்நீதிமன்றில் நாங்கள் தொடர்ந்துள்ள வழக்கு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது. சேதுகால்வாய்க்காக இதுவரை நடந்துள்ள பணிகள் குறித்து நிருபர்களை கடலுக்குள் அழைத்துச் சென்று காட்ட மத்திய கப்பல் துறை தயாராக இல்லை. ஏனெனில், கடலில் தோண்டிய அனைத்துப் பகுதிகளையும் மீண்டும் மணல்மூடிவிட்டது. இவ்வாறு அவர்கள் கூறினர். (அ-5)

# அரசின் தேசிய ஊடகக் கொள்கையை சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் நிராகரிப்பு

அரசாங்கம் முன்வைத்துள்ள தேசிய ஊடகக்கொள்கையை சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் நிராகரித்திருக்கிறது. அரசாங்கம் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அமைப்பிற்கான ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளரான ஜக்கோலின் பாக்கர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள ஊடகவியலாளர்கள் அவர்களின் கடமைகளின்போது எதிர்கொள்ளும் சவால்களுக்கும் பாதுகாப்பிற்கும் அவர்களுக்கெதிரான வார்த்தைப் பிரயோகங்கள் மற்றும் உடல் ரீதியான துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. தேசிய ஊடகவியலாளர் கொள்கையின் மூலம் இலங்கை அரசாங்கம், ஊடகங்கள் சுதந்திர மாக செய்தி வெளியிடுவதற்காக செயற்படுவதாக அந்த அமைப்பின் அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களும் ஊடக நிறு வனங்களும் இணக்கப்பாட்டோடு அரச தலையீடு இன்றி செயற்படுவதே மிகச் சிறந்தது என்று சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனம் தெரிவித்திருக்கிறது. (அ-7)

# கிழக்கில் அடை மழை மக்கள் பெருமளவு பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்த அடைமழையால் அந்தப் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மண்முனை, தென் எரிவில்பற்று, போரதீவுப்பற்று, பிரதேச செயலகப் பிரிவுகள் மழை வெள்ளத்தால் பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்முனை, தென் எரிவில் பற்று, குருமன் வெளி, மகளூர்முனை, நாகபுரம், பழம் தோட்டம், போரதீவு, பழுகாமம், நாலகிரநகர், விபுலானந்துபுரம் ஆகிய கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அம்பாறை மற்றும் திருகோணமலை பகுதிகளில் தாழ் நிலப் பகுதிகள் மழை வெள்ளத்தால் மூழ்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மகாஜாபுர, உப்பு வெல, சுமேதகம பகுதிகளில் தற்போது வெள்ள நீர் வழிந்தோடுவதாக திருகோணமலை மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் நூற்றுக் கணக்கான ஹெக்ரேயர் விவசாய விளை நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாகவும் தொடரும் மழை காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. திருகோணமலை நகரின் புறநகர்ப் பகுதி களில் மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பள்ளத் தோட்ட கிராம அபிவிருத்தி சங்கப் பணிமனையில் தஞ்ச மடைந்திருப்பதாகவும் சங்கத்தின் முன்னாள் தலைவர் தெரிவித்துள்ளார். (அ-7)


# மனோதிடத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்

மாணவர் பருவத்திலேயே மன அழுத்தம் ஆரம்பித்துவிடுகிறது. இதற்குக் காரணம், திட்டமிடப்படாத படிப்பு முறை, மாணவர்களின் விளையாட்டுத்தனம், பெற்றோ ரின் அலட்சியம் ஆகியவை தான் காரணம் என்கின்றனர் டாக்டர்கள். இதோ தேர்வுகள் நெருங்கிவிட்டன. மாணவர்களில் திட்டமிட்டு படித்து வருவோருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை; ஆனால், திட்டமிடாமல், 'தேர்வு வரட்டும்; பார்த்துக்கொள்ளலாம்' என்று சோம் பேறித்தனமாக இருந்தவர்களுக்கு இப்போது மன அழுத்தம் அதிகமாக இருக்கும்.

இதற்கு மருத்துவ நிபுணர்கள் கூறும் சில யோசனைகள்,

◆ தேர்வு நெருங்கிவிட்டால், மாணவர்களின் மன அழுத்தம் அதிகரிக்க ஆரம் பித் து விடும் ; தேர்வு நெருங்கிவிட்டது என்று பயம். அவர்கள் மண்டையை அழுத்த ஆரம்பிக்கும்.

◆ தேர்வு வந்துவிட்டது என்பதற்காக, உடலை, உள்ளத்தை வருத்திக்கொள்வது சரியல்ல ; அதனால், மன அழுத்தம் அதிகமாக, வேறு கோளாறினால் விட்டு விடும்.



◆ திட்டமிட்டு படித்து வரும் மாணவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை. தேர்வு வரும்போது படித்துக் கொள்ளலாம் என்று நினைப்பவர்களுக்குத் தான் அப்படி பிரச்சினைகள் வருகின்றன.

◆ இதற்கு மாணவர்களை மட்டும் குறை சொல்ல முடியாது ; பெற்றோரையும் தான் முதலில் குறைசொல்ல வேண்டும். சரிவர கண்காணிக்காமல் விட்டுவிட்டு, அப்புறம் அவர்களைத் திட்டுவது தான் சில பெற்றோரின் வாடிக்கையாக இருக்கிறது.

◆ 30 சதவீத மாணவர்களுக்கு 'எக்சாம் போமியா' இருக்கிறது என்று சமீபத்தில் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

◆ தேர்வு பயத்துடன் சரிவர தூக்கமின்மை, உணவு சாப் பிடாதிருத்தல் போன்றவையும் சேர்வதால், மனோ ரீதி யாக மாணவர்கள் பாதிக்கப் படுகின்றனர்.

◆ தேர்வு சமயத்தில், அதிக நேரம் தூங்காமல் எந்தப் பலனும் ஏற்படப்போவதில் லை. அதனால், தூக்கமும் கெட்டு, தேர்வு அரங்கில் ஞாபக மறதி ஏற்பட வாய்ப்புண்டு.

◆ நூற்றுக்கு 90 மதிப்பெண் எடுத்தே ஆக வேண்டும் என்று பெற்றோரும் நிர்ப்பந்திக் கக்கூடாது. மாணவர்களும் அளவுக்கு மீறி உடலை வருத்திக் கொள்ளக்கூடாது.

◆ யோகா, மூச்சுப் பயிற்சி ஆகியவை மாண வர்களின் மன அழுத்தம் போகவும், தேர்வு பயம் நீங்கி ஞாபகசக்தி அதிகரிக்கவும் பலன் தருகின்றன.

◆ பாடங்களை அட்டவணைப்படுத்தி, இப்போதில் இருந்து கூட தீவிரமாகப் படிக்கலாம். அதனால் நல்ல மதிப்பெண்ணும் எடுக்க வாய்ப்புள்ளது.

◆ இரவு தூங்காமல் ,டீ.காபி குடித்து படிப்பது உடலுக்கு கெடுதல் ; அதை கை விட்டு, திட்டமிட்டு படிக்க வேண்டும். சிறிது கூட சோம் பேறித்தனம் கூடாது.

இப்படி படித்தால் போதும், தேர்தலில் நிச்சயம் மதிப்பெண் எடுக்கமுடியும். மதிப்பெண் எடுக்கவேண்டும் என்று நினைத்து மன அழுத்தம் வரவழைத்துக்கொள்வதை விட, மனதிட்டத்தை வளர்த்துக்கொள்வது தான் முக்கியம்; அதற்கு பெற்றோர் தான் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும். பெற்றோர்களே, அன்பாக சொல்லி, படிக்க வையுங்கள்.

## உளவியல்

# தோல்விகளை தோற்கடிப்போமா?

'நாம் விரும்புவதை நம்பிக்கையுடன் எதிர்நோக்க வேண்டும். ஆனால் நமக்கு நேர்ந்து விடுவதைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்' என்ற ஸெனெகா அவர்களின் கூற்று இன்றைய நாட்களில் நாம் எதிர்கொள்ளும் சம்பவங்களின் படிப்பினையாகும்.

எல்லாம் நாம் நினைத்த படியே நடக்க வேண்டும் என எதிர்பார்ப்பதில் தவறில்லை. அதுவே மாறாக நடந்தால் அதனை எதிர்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும். இல்லை எனில் அதனால் ஏற்படும் விபரீதம் மனக் குழப்பமாக மாறிவிடக் கூடும்.

நேர்முகப் பரீட்சையாக இருக்கலாம். பாடசாலை பரீட்சைகளாக இருக்கலாம், வாழ்வின் துணை தேடலாகக் கூட இருக்கலாம். இவை எல்லாம் எதிர்பார்த்தவை 100% மும் நிறைவாய் கிடைக்காவிட்டால் அதனை ஏற்கும் மனப்பக்குவம் இல்லை எனில் வாழ்வில் எந்நாளும் மன உளைச்சலைத்தான் ஏற்படுத்தி விடும். இவை பல வடிவங்களாக வாழ்வின் நடைமுறைகளை சிதைத்து மாற்றப்பட்டதை பலர் வாழ்வே நல்ல உதாரணமாகக் கூறலாம்.

நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பது தவறு அல்ல, அந்த நம்பிக்கையின் எதிர்வினையினை எதிர்கொள்ளும் தற்துணிவும் உங்கள் மனவலிமையாகத்தான் வெளிப்படுத்த வேண்டும். பரீட்சையின் முடிவுகள் மாற்ற மடைந்தால் அதனை வெல்ல மீண்டும் முயற்சித்து வெல்லலாம் என விடாமுயற்சி கொண்டவர் வாழ்வில் வெற்றிகள் குவிந்ததை எம் எதிரில் பலரைக் காணலாம்.

இவை திருமண துணை தேடலாக மாறும் போது ஒவ்வொருவரும்தமக்கு வரும் துணையாளருக்கு இருக்கவேண்டிய பண்புகள், அழகு, வசதிகள் என நீண்டு செல்லும் எதிர்பார்ப்புகள் எல்லாம் நிறைவாக கிடைக்கவில்லை என்பதற்காக, உன் வாழ்வை தொலைத்துவிடாதே, இவைகள் மற்றவரின் எதிர்பார்ப்பும்உன்னிடம் இல்லாததை எண்ணி இருவரும் நிறைவேறாத ஆசையுடன் வாழ்க்கை எனும் வாகனத்தை செலுத்த முடியாது போய்விடும் அல்லவா?

பரீட்சையில் தோல்வி என்றால் இன்னும் ஒரு பரீட்சையினை எடுத்து வெற்றி கொள்ளலாம். வாழ்க்கை தெரிவு அப்படிப்பட்டது அல்லவே. ''மாற்ற இயலாததைக் குறை கூறாதே, மாறாமல் இருப்பதில் இருந்து இருக்கும் நல்லதை எண்ணி தாங்கிக்கொள்'', என்பார் புப்லிலியாப் ஸைரஸ் என்ற அறிஞன்.

கட்டையை- நெட்டையாக்கவோ, கறுப்பை - வெள்ளையாக்கவோ முடியாது. எம்மால், ஆனால் நல்ல பண்பை, நல்ல பாச உணர்வைத் தூண்டும் புன்சிரிப்பையும், அன்பு பகிர்வையும் உன்னால் பெற, அனுபவிக்க, பகிர முடிந்தால் அவற்றில் திருப்தி காண்பதே வாழ்வின் வெற்றியாகும்.

''என் மகுடம் இதயத்தில் உள்ளது. தலை மீது அல்ல ; பொன்னும், வைரமும், மாணிக்க கற்களும் மின்னும் என் மகுடத்தை அணி செய்யவில்லை ; கண்ணுக்கு தெரியாத என் மகுடத்தின்பெயர், மனத்திருப்திஅதுதான்மன அமைதி தரும்'' என்ற வில்லியம் ஷேக்ஸ்பியரின் கூற்றின் அர்த்தங்கள். உன் வாழ்வில் அனுபவிக்கும் போது அது தான் உன் சொர்க்கம்.

இன்றைய வாழ்வில் எல்லோரும் பலவித நெருக்கடிகளுடன் வாழ்ந்தபோதும், அவர்களின் எதிர்பார்ப்புக்கள் பலமுறை சிதைக்கப்பட்டு வீழ்ந்தபோதும், அதனையே எண்ணி சரிந்து விழாது மீண்டும், மீண்டும் எழுந்து நடக்க அவர்களின் செல்வாக்கோ, பிற உதவிகளோ மட்டும் துணை செய்யவில்லை. அவர்களிடமுள்ள மன வலிமையும் எதனையும் ஏற்றுக்கொள்ளும் தன்னம்பிக்கையும் தான் பல சாதனைகளை படைத்து வருகிறது.

**செ.யோசப் பாலா**

முயலாதது எல்லாம் முடியாததே, எதிலும் ஆசை கொள்வது சுலபம். அதனை அடைவதற்கு முயற்சி கொள்வதில் தான் வாழ்வின் வெற்றியே தங்கி உள்ளது. பிறரது வாழ்வு செயலைப் பார்த்து ஏங்குவதை விட, எமது முயற்சியின் முதல்படியாக உளமார செயற்படும்போது தோல்விகள் எல்லாம் தோற்றுப் போய் விடும் அல்லவா?

## இரண்டாவது போட்டியிலும் வெற்றி பெற்று தொடரைத் தனதாக்கியது தென்னாபிரிக்கா

பங்களாதேஷுடனான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று, தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளை யாடி வருகின்றது.

தொடரின் முதலாவது போட்டியில் வெற்றி பெற்று தென்னாபிரிக்க அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

இந்நிலையில் தொடரின் தீர்க்கமான போட்டி நேற்று மிர்பூரில் நடைபெற்றது. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களா தேஷ் அணி 48.2 ஓவர்களில் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களை மாத் திரம் எடுத்தது.

இதில் ரஹீப் உல் ஹசன் 63 ஓட்டங்களை யும் சஹீர் உல் ஹசன் 52 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக சிறப்பாக வீசிய அன்ரு நெல் 4 விக்கெட்டுக்களையும் லாங்க வெல்ட் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 174 ஓட்டங்க ளை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க ஏபி.டி வில்லியஸ், டுமினி ஆகியோரின் 4-வது விக்கெட்டுக்கு பிரிக்கப்படாத 119 ஓட்டங்கள் இணைப்பாட்டத்தினால் 48.1 ஓவரில் 3 விக் கெட்டுக்களை மாத்திரம் இழந்து 179 ஓட்டங் களை எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் ஆட்டமிழக்காமல் ஏபி.டி வில்லி யஸ் 69, டுமினி 49 ஓட்டங்களையும் பெற்ற னர்.

பந்துவீச்சில் அப்துல் ரஸாக் 2 விக் கெட் டுக்களையும் மோட்டாஸா ஒரு விக்கெட்டை யும் வீழ்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அன்ரு நெல் தெரிவானார். இவ்வெற்றியுடன் 3 போட்டிகள் கொண்ட தொடரை தென்னா பிரிக்க அணி 2:0 என்ற கணக்கில் தனதாக்கிக் கொண்டது.

(5)

## மேற்கிந்திய தீவுகள் ஒருநாள் தொடர்

## இலங்கை அணியிலிருந்து ஜெயசூர்யா அதிரடி நீக்கம்



(கொழும்பு)

மேற்கிந்தியத் தீவுகளுடனான ஒருநாள் தொடருக்கான இலங்கை அணியில் இருந்து ஆரம்ப அதிரடித் துடுப்பாட்ட வீரர் சனத் ஜெய சூர்யா நீக்கப்பட்டுள்ளார்.

அடுத்த மாதம் மேற்கிந்தியத்தீவுகளில் நடை பெறவுள்ள 3 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் இருந்து சனத் ஜெயசூர்யா நீக் கப்பட்டுள்ளார் என விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

38 வயதுடைய ஜெயசூர்யா 411 ஒருநாள் போட்டிகளில் விளையாடி பத்து ஆயிரம் ஓட் டங்களுக்கு மேல் குவித்ததுடன் 250 விக் கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தியுள்ளார்.

இலங்கை அணியின் மூத்த சகல துறை ஆட்டக்காரர் எனும் பெருமையுடைய சனத் ஜெயசூர்யா கடந்த வருடம் நடைபெற்ற உல கக் கிண்ண கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலி யாவுடனான இறுதிப்போட்டியில்இருந்து அண் மையில் நிறைவடைந்த சி.பி முக்கோணத் தொடர் வரை பங்குபற்றிய 20 ஒருநாள் போட் டிகளில் மொத்தமாக 305 ஓட்டங்களை (சரா சரி 15.25 மாத்திரமே பெற்றுள்ளார்.

இந்நிலையிலேயே சனத் ஜெயசூர்யாவை அணியிலிருந்து நீக்கி அவரின் இடத்திற்கு சிலாபத்தைச் சேர்ந்த 21 வயதுடைய மகேல உடவத்த அணியில் இணைக்கப்பட்டுள்ளார் என விளையாட்டுத்துறை அமைச்சர் கூறியுள் ளார்.

அத்துடன் 2011ஆம் ஆண்டு நடைபெற வுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு இன் னும் 36 மாதங்களே உள்ள நிலையில் அதற்கு தயாராக மேற்கிந்தியத் தீவுகளுடனான ஒரு நாள் தொடரில் முத்தையா முரளிதரனுக்கு ஓய்வு அளித்து இராணுவ அணியிலுள்ள சுழல்பந்து வீச்சாளரான 23 வயதுடைய அஜந்த மெண்டிஸ் இணைக்கப்பட்டுள்ளார்.

மேலும் முரளிதரன் பிரதான ஒருநாள் தொடர்களில் மட்டுமே எதிர்வரும் காலத்தில் அணியில் இணைக்கப்படுவார் எனவும் சிறி லங்கா கிரிக்கெட்டின் தேர்வுக்குழு தெரிவித் துள்ளது.

இதேவேளை இலங்கை அணியின் வே கப்புயல் லசித் மாலிங்கவும் காயம் காரண மாக அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

(5)

## வீரர்களின் பாதுகாப்பு அச்சம்

# பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை அவுஸ்திரேலிய அணி ஒத்திவைத்தது

(கராச்சி)

லாகூரில் நேற்று முன்தினம் நிகழ்ந்த இரட்டை குண்டுவெடிப்பு சம்பவத்தின் எதிரொலியாக அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி, தனது பாகிஸ்தான் சுற்றுப்பயணத்தை ஒத்தி வைத் துள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி எதிர் வரும் 29ஆம் திகதி முதல் பாகிஸ்தானில் சுற் றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டியில்விளையாட வேண்டும். ஆனால் பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொல்லப்பட்டதில் இருந்து அடிக்கடி குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடந்து வந்தன. பாது காப்பு அச்சம் காரணமாக அவுஸ் திரேலிய அணி அங்கு செல்ல தயக்கம் காட்டி யது.

அங்கு ஆய்வு செய்த அவுஸ்திரேலிய பாதுகாப்பு அதிகாரிகளும், தற்போதைய சூழ லில் பாகிஸ்தான் செல்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தினர். தொடர்ந்து பாகிஸ்தான் நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவ தாகவும், இந்த வாரத்திற்குள் பாகிஸ்தான் பய ணம் தொடர்பாக இறுதி முடிவு அறிவிப்போம் என்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெற்சபை முன் னர் கூறியிருந்தது.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய அணி யின் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் ஒத்திவைக் கப்படுவதாக இரண்டு நாட்டு கிரிக்கெற் சபை யும் இணைந்து நேற்று முன்தினம் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. பாகிஸ்தானின் லாகூர் நகரில் நேற்று முன்தினம் காலை அடுத்தடுத்து இரண்டு குண்டு வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்தன. அதன் தொடர்ச்சியாக இந்த அறிவிப்பு வெளி யானது.

உரிய நேரத்தில் இந்த சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு உள்ள தால் தாம் வருத்தம் தெரிவிப்பதாகவும், பாகிஸ் தானில் தற்போது நிலவிவரும் சூழலால், இத்தகைய முடிவை தவிர்க்க இயலாமல் போன தாகவும் அவுஸ்திரேலிய கிரிக்கெற்சபை தலை வர் கிரேக் ஓகானர் தெரிவித்தார். அவுஸ்திரே லியாவின் இந்த முடிவு தங்களுக்கு ஏமாற் றத்தை அளிப்பதாக பாகிஸ்தான் கிரிக் கெற் சபைத் தலைவர் நசிம் அஷ்ரப் வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டார்.

### பயிற்சியாளர் ஏமாற்றம்

இந்த முடிவால் பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக செயல்பட்டுவரும் அவுஸ்தி ரேலியாவை சேர்ந்த ஜெப்லோசன் அதிர்ச்சி அடைந்து இருக்கிறார். அவர் கூறுகையில், நான் பாகிஸ்தானில் தான் வசிக்கிறேன். பாதுகாப்புடன் இருப்பதாகவே உணர்கிறேன். அவுஸ்திரேலியாவின் கவலையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அதேசமயம், இந்த முடிவை நியாய மற்றதாகவே கருதுகிறேன்.

உலகின் தலைசிறந்த அணி தோற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் அவர்களுடன் விளையாட முடியாமல் போனது மிகுந்த ஏமாற் றம் அளிக்கிறது. ஆனால் ஒரு வகையில் மகிழ்ச்சி. சுற்றுப்பயணம் தள்ளி வைக்கப்பட்டு இருக்கிறதே தவிர, ரத்தாகவில்லை. ரத்து செய்யப்பட்டு இருந்தால் பாகிஸ்தான் கிரிக் கெற் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருக்கும் என்றார்.

### அடுத்த வாரம் ஆலோசனை

பாகிஸ்தானில் இந்த தொடர் நடத்த உள்ள திகதி மற்றும் இடம் குறித்து அடுத்தவாரம் டுபாயில் இரண்டு நாட்டு கிரிக்கெற்சபை நிர் வாகிகளும் ஆலோசனை நடத்தவுள்ளனர். ஆனால் இந்த ஆண்டு இறுதிவரை இந்த தொடரை நடத்துவதற்கு வாய்ப்பில்லை. அவுஸ்திரேலிய அணி ஓய்வில்லாத போட்டி அட்டவணையை கொண்டுள்ளது.

எனவே புதிய அட்டவணையை தயாரிப் பது கடினமான காரியம். 2009அல்லது 2010 ஆம் ஆண்டில் இந்த தொடர் நடத்தப்படலாம் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெற் சபை தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சுதர்லாண்ட் கூறி னார். வீரர்களின் நெருக்கடியால் ஒத்தி வைப்பு முடிவு எடுக்கப்பட்டது என்பதை அவர் மறுத் தார். அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணி, பாகிஸ் தானுக்கு சுற்றுப்பய ணம் செய்து 10 ஆண்டு கள் ஆகிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரிமியர் லீக்கில் ஆடுகிறார்கள்

திட்டமிட்டபடி பாகிஸ்தான் பயணம் தொடர்ந் திருந்தால் அவுஸ்திரேலிய வீரர்கள் இந்திய பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) போட்டியில் விளை யாட முடியாமல்போய் இருக்கக்கூடும். ஆனால் இப்போது பாகிஸ்தான் தொடர் தள்ளிபோய் விட்டதால், அவர்கள் ஐ.பி.எல். போட்டியில் சில ஆட்டங்களில் பங்கேற்க இருக்கிறார்கள். இது பற்றி ஜேம்ஸ் சுதர்லாண்ட் கூறுகையில், ஐ. பி. எல். போட்டி ஏப்ரல் 18ஆம் திகதி தொடங்குகிறது.

அவுஸ்திரேலிய அணி மே மாதம் தொடக் கத்தில் மேற்கிந்தியதீவுகளுக்கு சுற்றுப்பய ணம் செய்து விளையாட இருக்கிறது. அனேக மாக அவுஸ்திரேலிய வீரர்கள் பிரிமியர் லீக் போட்டியில் சிறிது காலம் விளையாட வாய்ப்பு இருக்கிறது என்றார்.

(5)

# ஒருநாள் போட்டியில் மட்டும் விளையாடவும்

## அக்தருக்கு பயிற்சியாளர் ஆலோசனை

(கராச்சி)

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷோயிப் அக்தர் ஒருநாள் போட்டிகளில் மட்டும் விளையாட வேண்டும் என்று பயிற்சி யாளர் லோசனை கூறியுள்ளார்.

32 வய தாகும் ஷோயிப் அக்தர் சர்ச்சைக் குரியவராக இருந்து வருகிறார். மேலும் அவர் உடல் நல தகுதி பிரச்சினையாலும் பாதிக்கப் பட்டிருக்கிறார்.

கடந்த ஆண்டு சில போட்டிகளில் மட்டுமே அவர் பங்கேற்றார். இந்நிலையில் அக்தர் டெஸ்ட் போட்டிகளில் ஆடாமல் ஒருநாள் போட் டிகளில் மட்டுமே விளையாட வேண்டும் என்று ஆலோசனை கூறியிருப்பதாக பாகிஸ்தான் பயிற்சியாளர் லோசன் கூறியுள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் மட்டும் ஆடுவதன் மூலம் மேலும் அதிக காலம் போட்டிகளில் பங் கேற்கலாம் என்று லோசன் தெரிவித்துள்ளார். (5)




# கப்ரஸ்ஸலசி ஒலிம்பிக் மரத்தன் போட்டியிலிருந்து விலக தீர்மானம்

எதியோப்பியாவின் ஹெய்ல் கப்ரஸ்ஸ லசி இம்முறை ஒலிம்பிக் மரத்தன் ஓட்டப் போட்டியில் பங்குபெறப் போவதில்லை என அறிவித்துள்ளார். சீனாவில் காணப்படும் அசுத்தமான காற்று தமது சுகாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என கூறியே அவர் மரத்தன் போட்டியில் பங்கு பெறுவதை தவிர்த் துள்ளார்.


மரத்தன் ஓட்டப்போட்டியில் உலக சாத னைக்கு சொந்தக்காரரான ஹெய்ல் கப்ரஸ் ஸலசி ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட் டுள்ளார். இதன் காரணமாக அவர் கடந்த 2007ஆம் ஆண்டு நடைபெற்ற லண்டன் மரத்தன் ஓட்டப்போட்டியிலும் பங்குபெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் 34 வயதான கப்ரஸ்ஸலசி 2008ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியின் 10, ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்கு பெற திட்டமிட்டுள்ளார். சீனாவின் சூழ்நிலை எனது சுகாதாரத்துக்கு பாதிப்பாக அமையும் என பயப்படுகிறேன்.

இந்நிலையில் அங்கு என்னால் 42 கிலோ மீற்றர்கள் ஓடமுடியாது. ஆனால் இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் இருந்துநான் முழு மையாக விலகிக்கொள்ளவில்லை. 10 ஆயி ரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் எதியோப்பியா சார்பில் கலந்துகொள்ள எதிர்பார்க்கிறேன். என்று ஹெய்ல் கப்ரஸ்ஸலசி தெரிவித்தார்.

இதனிடையே ஹெயல் கப்ரஸ்ஸலசி ஒலிம்பிக் மரத்தன் ஓட்டப்போட்டியில் பங்கு பெறுவது குறித்த இறுதி முடிவு வரும் மே 24 ஆம் திகதி நெதர்லாந்தில் நடைபெறவுள்ள மரத்தன் ஓட்டப்போட்டியின் பின்னரே எடுக் கப்படவுள்ளதாக அவரது முகவர் ஜோஸ் ஹமன்ஸ் தெரிவித்தார்.

அத்துடன் இம்முறை மரத்தன் ஓட்டப் போட்




டியில் எதியோப்பியா சார்பில் மூன்று வீரர்களை பங்குபெறச்செய்ய திட்டமிட்டுள்ளதாக கூறிய ஹமன்ஸ் இதன் மூலம் எதியோப்பியா மரத் தன் ஓட்டப்போட்டியில்தங்கம், வெள்ளிமற்றும்வெண் கலப்பதக்கங்களை வெல்லும் என எதிர்பாப் பதாகவும் குறிப்பிட்டார். ஒலிம்பிக் விளை யாட் டுப் போட்டி வரும் ஆகஸ்ட் மாதம் சீனாவில் உள்ள பீஜிங் நகரில் ஆரம்பமாகவுள்ளது. (5)

தேன்மலரைக் கண்டுபிடிக்கத் தெரியாத
தேனீக்கு பட்டினிதான் பரிசு!
-இலங்கை

வலம்புரி

# சிறுதானியச் செய்கையில் விவசாயிகள் ஈடுபடவேண்டும்

வயல் விழா எடுத்த விவசாயிகளுக்கு வருண பகவான் மற்றுமோர் வெகுமதியொன்றை அளிக்க முன்வந்துள்ளான். அதன் பயனாக கடந்த இரு தினங்களாக மன நிறைவு தரும் மழை பெய்து வருகிறது.

மார்ச் மாதம் வெப்பம் கூடிய காலம் இக்காலத்தில் ஏற்படும் வரட்சியால் கால்நடைகள் முதல் விவசாயச் செய்கைகள் வரை பாதிக்கப்படுவது வழமை.

ஆனால் இவ்வருடம் கடந்த இரு தினங்களாக மழை பெய்துள்ளது. இதனால் நெல் அறுவடைக்குப் பின்னர் மேற்கொள்ளக்கூடிய எள்ளு, குரக்கன், பயறு, உழுந்து, கௌப்பி போன்ற சிறுதானியங்களை செய்கை செய்வதில் விவசாயிகள் நாட்டம் கொள்ள வேண்டும்.

இதற்குத் தேவையான விதை தானியங்களையும் ஆலோசனைகளையும் கமநல சேவைத் திணைக்களம் வழங்க முன்வரவேண்டும்.

தற்போதைய விலைவாசி ஏற்றத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு இருக்கக்கூடிய ஒரே வழி உணவுப் பயிர்களையும் தானியங்களையும் உற்பத்தி செய்வதாகும்.

அவ்வகையில் இந்த ஆண்டின் நெல் அறுவடை 'வயல் விழா' எடுக்குமளவிற்கு திருப்தியளித்துள்ளதால் விவசாயிகள் மென்மேலும் ஊக்கம் கொண்டு சிறுதானியச் செய்கையிலும் ஆர்வம் காட்டவேண்டும்.

பெய்துள்ள மழையை நல்ல முறையில் பயன்படுத்தி நெல் அறுவடை செய்த வயல் நிலங்களில் சிறுதானியச்செய்கையை மேற்கொள்வோமாயின் அதனால் பெரும் பயனடைய முடியுமென்பதுடன், அதனூடாக எமது மக்களின் உணவுத் தேவையையும் ஓரளவு நிறைவு செய்து கொள்ள முடியும்.

எமது முன்னோர்களின் வாழ்க்கை முறையை- அவர்களின் உணவுப் பழக்கங்களை ஒரு கணம் திரும்பிப் பார்ப்போமாயின்; அவர்கள் அரிசி, பயறு, உழுந்து, தினை, குரக்கன், கௌப்பி எள்ளு, கடலை போன்ற தானிய வகைகளையே தமது உணவாகக் கொண்டிருந்தனர்.

இதனால் அவர்கள் ஆரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழும் பேற்றைக் பெற்றனர்.

ஆனால், அமெரிக்கக் கோதுமை மாவின் அறிமுகத்தைத் தொடர்ந்து அரிசி மாவின் பயன்பாடும் சிறுதானிய உணவுப் பண்டங்களும் முற்று முழுதாக எம்மை விட்டு விலகிப் போயிற்று. கோதுமை மாவிற்கு அடிமையாகிப் போன பரிதாபத்திலிருந்து மீள முடியாதா? என்ற கேள்வியின் மத்தியில் தற்போது ஒருகிலோ கோதுமை மா எண்பத்தொரு ரூபாயாக உள்ளது.

அதேநேரம் கோதுமை மாவை நம்பி எமது சொந்த விளைநிலங்களில் செய்கை செய்யக்கூடிய சிறுதானிய உற்பத்தி முடங்கிப் போக அவற்றின் விலை அதிவேகமாக உயர்வடைந்துள்ளது.

இதனால் நல்லெண்ணெயின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை நாம் காண்பதுடன் இந்த விலை அதிகரிப்பு எமது வாழ்க்கைச் செலவில் கணிசமான தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது.

குழந்தைகள் முதல் முதியவர்கள்வரை நாளாந்தம் பயன்படுத்தும் நல்லெண்ணெய்க்குரிய மூலப்பொருளான எள்ளை எமது நிலத்தில் தாராளமாக உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தும் அதனை நாம் செய்யவில்லை என்பது வேதனைக்குரிய செய்தி.

எனவே இத்தகைய வேதனை தரும் செய்திகளை ஓரம் கட்ட சிறுதானியச் செய்கையில் விவசாயிகள் நாட்டம் கொள்வது அவசியமாகும்.

# ஜனாதிபதித் தேர்தலில் தவறாக செயல்பட்டமைக்கு மங்கள சமரவீர வருத்தம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைப்பற்றிக் கருதாமல் அரசியல் இலாபங்களுக்காக முடிவெடுத்து செயற்பட்ட அனைவரும் நாட்டின் இன்றைய மோசமான நிலைமைக்கு பொறுப்புக் கூறவேண்டும்மென மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் பிரிவின் பிரதான ஏற்பாட்டாளரான மங்கள சமரவீர எம்.பி.தானும் சில அரசியல் இலாபங்களுக்காக செயற்பட்டமைக்காக பொறுப்புக்கூற வேண்டியிருப்பதாகவும் அதிலும் 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் செய்ததே தான் இழைத்த பெரும் பாவமென்றும் கூறியிருக்கிறார்.

ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவும் இணைந்து ஏற்படுத்தியிருக்கும் தேசிய சபைக்கான தேசிய கொள்கையொன்றை உரு வாக்கும் முகமான தேசியக் கொள்கைக்கான தேசிய ஆலோசனை நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற வேளை அங்கு உரையாற்றும் போதே மங்கள சமரவீர இவ்வாறு கூறினார்.

நாம் அனைவரும் பல கனவுகளுடன் இருக்கிறோம். யுத்தமில்லாத சமூகம் பற்றிக்கனவு காண்கிறோம். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு ஐக்கிய இலங்கைக்குள் சகல இன மக்களும் இலங்கையர்களாக வாழும் யுகத்திற்கு கனவு காண்கிறோம்.

ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தி மாற்றுக்கருத்துக்களை தெரிவிக்கக் கூடிய ஜனநாயக நாடு பற்றி நாம் கனவு காண்கிறோம். இதேபோல் இந்த நாட்டின் நற்பெயரைப் பாதுகாக்கும் தலைமைத்துவமொன்றிற்கும் கனவு காண வேண்டியுள்ளது.

இந்த கனவுகளை நிறைவேற்ற சில முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும் சுதந்திரம் பெற்று 60 வருடங்கள் நிறைவடைந்து விட்டநிலையில் இலங்கை தோல்வியடைந்த நாடாக சென்று கொண்டிருக்கிறது.

ஒரு மாதத்துக்கு முன்னர் இடத்துக்கிடம் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்ற சூழ்நிலையிலேயே ஜனாதிபதி சுதந்திர தின விழாவை கொண்டாடினார். தெற்கில் இடம்பெறும் குண்டு வெடிப்புக்கள் மட்டுமல்லாது வடக்கில் விமானக் குண்டு வீச்சுகளால்தமிழர்கள் கொல்லப்பட்டுவருகின்றனர்.

சுதந்திரமடைந்து 60 வருடங்களில் 52 வருடங்கள் இனப்பிரச் சினைகளிலேயே கழிந்துள்ளது. 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அது இனயுத்தமாக உருவெடுத்து இன்னும் தொடர்ந்து வருகிறது ,என்றும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# சுகாதாரத்துறையை ஊக்குவிக்க 102 பேருக்குவிருதுகள்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் கீழ் செயற் படும் நிறுவனங்களினதும் ஊழியர்களி னதும் திறமைகளைப் பாராட்டி சிறப்பு விருது களை வழங்கி ஊக்குவிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் நிமல் சிறி பாலடி சில்வா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இந்நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

சுகாதாரத்துறை ஊழியர்களின் அர்ப்பணிப்பையும் திறமைகளையும் பாராட்டுவதே இதன் நோக்கமாகும். முன் மாதிரியான சேவைகளைப் பாராட்டுவ தன் மூலம் மக்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுக்க அந்த நிறுவனங்களை மேலும் ஊக்கப் படுத்த முடியும்.

இவ்விருதுகளுக்கான நபர்களையும் நிறுவனங்களையும் தெரிவு செய்யும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த விருதுகளைப் பெறுவோருக்கு வெளி நாட்டு புலமைப்பரிசில்களையும் சுற்றுலா வசதி களையும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. விருது வழங்கும் நிகழ்வன்று வெளி நாட்டுப் புலமைப் பரிசில் மற்றும் சுற்றுலாவசதிகளை வழங்குவதற்குத் தெரிவு செய்யப்படுபவர்களது பெயர்கள் அறிவிக்கப் படும். இந்த விருது 102 பேருக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்(அ-5)

# எம் வாழ்வு முன்னுதாரணமாகட்டும்

பாவமற்ற எனக்கே இந்த நிலையென்றால் பாவங்களில் அமிழ்ந்து நிலை தடுமாறி வழிதவறிச் சென்று கொண்டிருக்கும் உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் நிகழப்போவதை எண்ணிப் பாருங்கள். எனவே என் மட்டில் ஆறுதலடையுங்கள். உங்களுக்காகவே அழுங்கள். கல்வாரிப் பாதையிலே தம்மைப் பின் தொடர்ந்த அனுதாபிகளுக்கு இயேசு கூறிய வார்த்தைகள்.

## தவக்காலப் பொழிவு

நாம் செய்யும் ஒவ்வொரு தவறுகளும் முறைகேடுகளும் எம்மை மட்டும் பாதிப்பதில்லை. பிறரையும் பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது. அத்துடன் பெரியோரை, இளையோரை அடியொற்றி வாழும் பிள்ளைகளும் பாவத்தின் தாக்கங்களை உணராத நிலைக்கு தள் ளப்படுகின்றார்கள். எனவே அவற்றில் இருந்து நாம் விடுபட்டு மனமாற்றம் பெற்றவர்களாக முன்னுதாரணமாக வாழ முற்பட வேண்டுமென இந்த வார்த்தைகள் எமக்கு உணர்த்துகின்றது.

மனமாற்றம் பெறவும், அன்பு செய்யவும், ஒப்புரவு கொள்ளவும், சமாதானத்தைப் பகிரவும் ஏற்புடைய காலம் இதுவே. இயேசுவுக்கு ஆறுதல் கூறவும் அவரை எந்நேரமும் சந்திக்கவும் நாம் செய்யவேண்டியது என்ன? பிறரை வசை பாடு வதை விடுத்து ஆறுதல் வார்த்தைகளை வழங்குவோம். அடாவடித்தனங் களை நிறுத்தி அணைத்து வாழுவோம்.

நீதி உரிமை மறுக்கப்பட்டோருக்கும் ஏழைகளுக்கும் சிறைப்பட்டோருக்கும் உறவுகள் இழந்தோருக்கும் நோயாளர்க்கும் தனிமையில் வாடுவோருக்கும் உதவிக்கரம் நீட்டுவோம். எமது சொல் , செயல், உடைந்த உள்ளங்களை ஆற்றுப் படுத்துவோம். நல்ல முளைத்திறன் மிக்க தானியங் களான நற்பண்புகளை விதைத்து நற்கனிகளை அறுவடை செய்வோம். அதுவே எமக்கும் எம் சந்ததிக்கும் நல்வாழ்க்கை தரும் .



'ஆறுதல் வார்த்தைகளே உளக் காயங்களுக்கு சிறந்த ஔடதம்'

எஸ்.யோசுதாஸ்

# அநாதரட்சகர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா



அண்மையில் புட்ட பர்த்தியில் பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபாவின் தலைமையில் உலக சாயி இளைஞர் மாநாடு நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற சாயி பக்தை திருமதி. சூரியகுமார் சாரதா தேவியும் மாநாட்டில் கலந்து பகவானின் தரிசனம் பெற்று மீண்டும் யாழ்ப் பாணம் வந்தார். சில நாட்களின் பின் அவருக்கு திடீரென கண்கள் இரண்டும் பார்வையாற்று கை கால்களும் வழங்காது மிகவும் அவஸ்தைப்பட்டார். யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பல நாட்களாக சிகிச்சை பெற்று பலன் எதுவும் கிட்டாது கொழும்பிலுள்ள பிரபல வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. அங்கும் ஒரு வித முன்னேற்றமும் இல்லாது போகவே இறுதியில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்த்தனர். பலன் பூச்சியமே. வைத்திய சாலை நிபுணர்கள் கை விரித்துவிட்டனர். மருத்துவ உலகம் இனியும் சரிவராது எனக் கண்டு உறவினர்கள் பரந்த தெய்வம் பகவான் பாபாவே முழுமையான தஞ்சமென சாரதாதேவியை மீண்டும் யாழ்ப்பாணம் அழைத்து வந்தனர்.

சாரதாதேவி குடும்பமே பகவானின் தீவிர பக்தர்கள் .பகவானும் இவர்களை மேலும் தீவிர அடியவர்களாக ஆட்கொள்ளும் பொருட்டு தன்னுடைய சோதனையை இவர்கள் முன்வைத்தார் போலும்.

திரௌபதையின் துகிலை துச்சாதனன் களையும் போது தனது இரு கரத்தாலும் சேலையைப் பிடித்துக்கொண்டு அவள் ''கண்ணா கண்ணா'' என்று ஓலமிட்டாள் .அதைக் கண்ட றுக்மணி உன்னை நினைத்து ஒரு பெண் ஓலம் இருக்கிறாளே நீ பார்த்துக்கொண்டு இருக்கிறாய் இது நீதியோ என்று கண்ணணைக் கேட்டாள் .கண்ணணும் 'அவள் இன்னும் முழுமையாக என்னை நம்பவில்லையே' என்றார் . அவ்வேளை திரௌபதை அவ்வசுரத்தனத்தைத் தடுக்க தன் கைகளுக்கு வலுவில்லை என நினைத்து இரு கைகளையும் மேலுயர்த்தி கண்ணா , கோவிந்தா அநாதரட்சகா என்று முழுமனதுடன் கண்ணணை அழைத்தாள். சேலை வளரத் தொடங்கியது. துச்சாதனன் சேலையை தொடர்ந்தும் களைய முடியாது மயக்கமுற்றான்.

இதே போன்று சாரதா தேவி குடும்பமும் பகவானின் சிந்தனை பாதி வைத்தியம் பாதி யென்பதை கைவிட்டு எல்லாம் வல்ல பரம்பொருள் பகவான் பாபாவே கதியென யாழ்ப்பாணம் கைலாச பிள்ளையார் கோவிலருகே அமைந்துள்ள சாயிசேவா நிலையத்தில் தஞ்சம் புகுந்தனர். பகவானே சுவாமி நீயே கதியென செப்பினர் அவ்வாலயத்தில் சேவையாளர்களும் பஜனா வழியினரும் திரண்டு சாரதாதேவி நோயினின்று நீங்க பகவானை இறுக்கப்பிடித்தனர். எண்ணி மூன்று நாட்கள் சாரதா தேவி பார்வையற்ற கண்களில் பார்வைபெற்று வழங்காத கை , கால்கள் வழங்கப்பெற்று இப்போது பகவானின் தீவிர பக்தையாகி தினமும் சாயி சேவாஆலயம் வருகிறார், வணங்குகிறார். அவரின் கணவர் இப்போது முழுநேர ஊழியனாக சாயி ஆல யத்தில் சேவையாற்றி வருகிறார்.

பகவான் அடியார்களை தன்னை நோக்கி அழைப்பதற்கான வேதனை தரும் சோதனையே இது.

ஜெய்சாயிராம் - யாதவன்-

# சிராந்தி ராஜபக்ஷ கலந்து கொண்ட நிகழ்வில் நவீன கருவிகள் கொண்டு கடும் சோதனை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரி யார் சிராந்தி ராஜபக்ஷவின் பாதுகாப்புக் கருதி ஊடகவியலாளர்களின் பாதணிகள் கழற்றப்பட்டு நவீன கருவிகள் மற்றும் மோப்ப நாய் உதவியுடன் கடும் சோதனைக்கு உள் ளாக்கப்பட்டனர்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் சிராந்தி ராஜபக்ஷ கலந்து கொள்ளவிருந்த சமயமே இந்தச் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

சிராந்தி ராஜபக்ஷவின் பாதுகாப்புக் கருதி நூற்றுக் கணக்கான பொலிஸார் குவிக்கப் பட்டிருந்ததுடன் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரி வினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதன்போது அங்கு வருகை தந்திருந்த பாட சாலை மாணவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் பலத்த சோதனைகளுக்கு உட் படுத்தப்பட்டுள்ளனர். இந்தச் சோதனை நட வடிக்கைகள் இரண்டு மணித்தியாலங்க ளுக்கு மேலாகவும் நடைபெற்றுக் கொண்டி ருந்தன.

இதன்போது ஊடகவியலாளர்கள், இலத் திரனியல் சாதனங்கள் அனைத்தும் நவீன கருவிகள் மற்றும் மோப்ப நாய் சகிதம் சோத னையிடப்பட்டன. இந்தச் சோதனை நடவடிக் கைகளின்போது ஊடகவியலாளர்களின் 20 பாதணிகளும் கழற்றப்பட்டுச் சோதனையிடப் பட்டதுடன் அதற்கும் நவீன கருவிகள் மற்றும் மோப்ப நாய் சோதனை நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. இவ்வூடகவியலாளர்களில் ஒருவர் தமிழர் மற்றையவர் சிங்களவர்கள். (ச-5)

# மனித உரிமைகளுக்கான மதிப்பு இலங்கையில் குறைந்துள்ளது

## அமெரிக்க இராஜாங்க செயலகம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமைகளுக்கான மதிப்பு போர் காரணமாகக் குறைவடைந்துள் ளது. கொலைகள், அரசியல் சம்பந்தமான கொலைகள், காணாமல் போதல் போன்ற குற்றச்செயல்கள் காரணமாக மனிதஉரிமை கள் மீறப்பட்டுள்ளன.

சிறுபான்மையினங்களுக்கு எதிராக பார பட்சம் காட்டப்படுகின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இலங்கையில் மனித உரி மை மீறல்கள் அதிகரித்துச் செல்வதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க இராஜாங்க செயலகம் அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளது.

இலங்கையில் நடைபெறும் யுத்த சூழல் காரணமாக மனித உரிமை மீறல்கள் அதிக ரித்துச் சென்றுள்ளது. அரசியல் படுகொலை கள், காணாமல் போதல்கள் மூலம் இலங் கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

அத்துடன் சிறுபான்மை இனங்கள் மீது தொடர்ச்சியாகப் பாரபட்சம் காட்டப்பட்டு வரு கின்றது. இதேநேரம் சிறார்களைப் படையணி களில் இணைப்பதை விடுதலைப்புலிகள் தவிர்த்து வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் தொடக்கம் 18 வயதுக்கு மேற்பட்டோரை விடுதலைப்புலிகள் அமைப் பில், விடுதலைப்புலிகள் இணைத்து வருவ தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. யுனிசெவ் நிறு வனமும் இதனை உறுதி செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மட்டக்களப்பு தேர்தல் முடிபுகளை...

பிட்ட அமைச்சர், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிபுகளை சர்வதேச நாடுகள் ஏற்றுக் கொண் டிருப்பதாகத் தெரிவித்தார்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு நாட்டில் ஜனநாயகம் ஏற்படுத்தப்படும் என அரசாங் கம் வழங்கிய வாக்குறுதியில் பெரும்பகுதி இந்தத் தேர்தல் மூலம் நிறைவேற்றப்பட்டுள் ளது என அமைச்சர் குறிப்பிட்டார்.

கிழக்கின் ஜனநாயக ரீதியில் தேர்தல் நடத் தப்பட்டமையானது முதல் முக்கியமான விட யம். விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த பிள்ளையான் குழுவினர் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டமை இரண் டாவது முக்கியமான விடயம்.

மட்டக்களப்பு உள்ளூராட்சிமன்றத் தேர் தல்களில் அரசாங்கத்துக்குக் கிடைத்திருக் கும் வெற்றியானது கிழக்கு மாகாண சபைக் கான தேர்தல் ஒன்றின் தேவையை வலியு றுத்தி நிற்கின்றது என ஊடகவியலாளர் மா நாட்டில் றோகித போகொல்லாகம கூறினார்.

கிழக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதி களையும் உள்ளடக்கியதாக எதிர்வரும் மே மாதம் கிழக்கு மாகாண சபைக்கான தேர்த லை நடத்த அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. இதற்கு விரைவில் நியமனப் பத்திரங்கள் கோரப்படும் என்பதை வெளிநாட்டுத் தூதுவர் களுக்கு எடுத்துக் கூறியிருப்பதாக அமைச் சர் குறிப்பிட்டார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தை விடு தலைப்புலிகளிடமிருந்து இராணுவத்தினர் முற்றாக மீட்டமையாலேயே அங்கு தேர்தல் களை நடத்தி வெற்றிபெற முடிந்தது. இராணு வத்தினர் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத் தாத வகையிலேயே மோதல்களை நடத்தி யுள்ளனர் என்பது இந்தத் தேர்தல் முடிபுகள் மூலம் தெளிவாகிறது என்றார் வெளிவிவகார அமைச்சர்.

விடுதலைப்புலிகளிடமிருந்து கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டு அங்கு அரசாங்கம் அபிவிருத்திப் பணிகள், உட்கட்டுமான வசதி கள் என்பவற்றை ஏற்படுத்தியுள்ளது. நடை பெற்று முடிந்திருக்கும் தேர்தலானது அரசாங் கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலும் பலம் சேர்த்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 2 ஆயிரம் தமிழ் பேசும் பொலிஸார் இணைத்துக் கொள்ளப்பட வுள்ளனர். இதில் 50 பெண்களை உள்ளடக் கியதாக 178 பொலிஸார் ஏற்கனவே இணைக் கப்பட்டு விட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன் றத் தேர்தல்களில் கிடைத்திருக்கும் வெற்றி யை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கை போன்று பிரச்சினைகளை எதிர்நோக்கும் நாடுகள் தமது நாட்டுக்குள்ளேயே தீர்வைக் கண்டுகொள்ள முடியும் என நேற்று கொழும் பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல் லாகம மேலும் கூறினார். (ச-5)

# அஞ்சல் மாஅதிபர் இன்று யாழ்.விஜயம்

அஞ்சல் மாஅதிபர் பி.கே.எம். திஸநாயக்க உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இவர் யாழ்.மாவட்டத்தில் தபால்சேவை களை மேம்படுத்துவது மற்றும் தபால்சேவை களில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது போன்றவை குறித்து ஆராயவுள் ளார். (எ)

# வடக்கின்...

சில நாள்களாகப் பெய்து வரும் மழை காரணமாகப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறி விக்கப்படும் என அதிபர் மேலும் தெரிவித் துள்ளார். (ச)

# முரண்பாடுகளைத் தீர்த்த...

நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய இயக்க உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்துள் ளார். அச் சந்திப்பில் ஜனாதிபதி தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் பயங்கரவாதத் தைத் தோற்கடித்து அம் மாகாண மக்களுக் குப் பெற்றுக் கொடுத்த வாக்குரிமையை வடக்கு மாகாண மக்களுக்கும் பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

வன்முறைகள் அற்ற தேர்தல் ஒன்றைக் கிழக்கில் நடத்துவதற்கு அரசாங்கம் முன்வந் துள்ளது என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த மக்களுக்குத் தங்களது பிரதி நிதிகளை மாகாண சபைக்குத் தெரிவு செய் வதற்கான சந்தர்ப்பம் ஒன்றை விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்ந் தளிப்பதே அரசாங்கத்தின் நோக்கமா கும். இதர மாகாணங்களில் மக்கள் அனு பவிக்கின்ற உரிமைகளை கிழக்கு மாகாண மக்களுக்கு மட்டுமல்லாது வடக்கு மாகாண மக்களுக்கும் பெற்றுக் கொடுப்பது சகலரின தும் பொறுப்பாகும்.

17-வது அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் மற்றும் அரசியல் அமைப்புச் சபைக்கு உறுப் பினர்களைத் தெரிவு செய்வது தொடர்பான தற்போதைய நிலைமைகள் குறித்து அங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரசியல் சபையை நிறுவுவது தொடர்பா கக் காணப்படுகின்ற சட்ட மற்றும் நிர்வாக முரண்பாடுகள் குறித்துக் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அரசியல் அமைப்புச் சபையில் காணப்படுகின்ற சட்ட மற்றும் நிர்வாக முரண்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற் காக நிறுவப்பட்டுள்ள ஆலோசனை சபையின் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த முரண்பாடுகளுக்குத் தீர்வு கண்ட தன் பின்னரே அரசியல் அமைப்புச் சபை நிறுவப்படும். நாடாளுமன்ற அதிகாரம் மற் றும் நாடாளுமன்ற முறையை வலுப்படுத்து வதே எனது நோக்கமாகும் என்பதுடன் சகல பிரஜைகளினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைக ளை எடுத்துள்ளது.

மூடி மறைப்பதற்கு அரசாங்கத்திடம் ஒன் றுமேயில்லை என்பதனாலேயே உலகத்தி லேயே முதற்தடவையாக மனித உரிமைகள் தொடர்பாக கண்காணிப்பதற்கான குழு ஒன்று இலங்கைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்றார்.

ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துவதற் கான தேசிய இயக்கத்தின் சார்பாக மாதுலு வாவே சோபித தேரர், விக்டர் ஐவன், குமார் ரூபசிங்க , மஹேந் தயானந்த , எல்மோ பெரேரா மற்றும் பாயிஸ் ரஹூமான் ஆகியோ ரும் கலந்து கொண்டுள்ளனர் என்று ஜனாதி பதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மட்டு.தேர்தலைப் புறக்...

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப் பாட்டத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஆதர வாளர்களும் கலந்து கொண்டு தேர்தலுக்கு எதிராகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற தேர்தல்கள் ஜனநாயகத் துக்கு விரோதமாக இடம்பெற்றுள்ளது. படை யினரால் ஒரு ஆயுதக் குழுவிடமிருந்து மீட் கப்பட்ட கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் மற்றுமொரு ஆயுதக் குழுவிடம் கையளிக்க முற்படுவதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

விடுதலைப்புலிகள் தரப்பினர் ஆயுத வன்முறைகள் மூலம் அதிகாரத்தைக் கைப் பற்ற முயலும் அதேவேளை, அரசாங்கம் விடுதலைப்புலிகளிடமிருந்து பிரிந்து சென்ற ஆயுதக் குழுவான பிள்ளையான் அணிக்கு அதிகாரத்தை கையளிக்கும்படி எம்மை வலியுறுத்தி வருகின்றது.

இந்த நிலையில் அரசாங்கத்திற்கும் விடு தலைப்புலிகளுக்குமிடையிலான வித்தியா சம் யாது? இவையனைத்தும் மக்களின் ஜன நாயகச் செயலை மீறுகின்ற செயல்கள். இத னால்தான் தேர்தல் முடிபுகளை புறக்கணிக் கும்படி தேர்தல் ஆணையாளரிடம் வேண்டு கோள் விடுத்ததாக ரணில் தெரிவித்துள் ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக் கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங் கை வெளிவிவகார அமைச்சர் றோகித போ கொல்லாகம தெரிவித்த கருத்துக்கள் வரு மாறு,

ஐக்கிய தேசியக் கட்சி தனது சக்தியை அறிந்து தேர்தலில் இருந்தும் மக்களிடமிருந் தும் பயங்கரவாதத்திற்குக் கீழ் படிந்து நடக் கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போன்று விலகியதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, அரசியல் இலாபம் தேடும் நோக்கில் அது பல்வேறு குற்றச்சாட் டுக்களை முன்வைத்ததாகவும் இந்த நடவடிக் கை அக் கட்சியின் கையாலாகாத தன்மை யைக் காட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல் என்பது அங்கு ஜன நாயகத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளில் ஒரு மைல்கல் என்றும் தெரி வித்துள்ளார். (ச-2)

# மடுப் பகுதியில் நேற்று...

விடுதலைப்புலிகளால் மேற்கொள் ளப்பட்டு வரும் தாக்குதல் நடவடிக் கைகளுக்கான பிரதான களங்க ளாக விளங்கும் மூன்று முகாம்கள் மீது குண்டுத் தாக்குதல் மேற்கொள் ளப்பட்டதாகவும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

விமானப் படையின் புலனாய் வுப் பிரிவினர் மற்றும் தரைப் படை யினரால் இலக்கு வைக்கப்பட்ட பிர தேசத்தின் மீதே இத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது மேற்படி முகாம்கள் முற்றாக அழிக் கப்பட்டுள்ளதாக தாக்குதலில் ஈடு பட்ட விமானப் படையினர் உறுதியா கத் தெரிவித்துள்ளதாக தேசிய பாது காப்புக்கான ஊடக மத்திய நிலை யம் தெரிவித்துள்ளது. (ச-5)

# மட்டக்களப்பு உள்ளூராட்...

கத்தால் மட்டக்களப்பு கீளங்கப்பட் டிருக்கின்றது என்று குறிப்பிட்டார். இத் தேர்தலில் பிள்ளையான் குழு பெற்றுள்ள வெற்றியின் மூலம் விடுதலைப்புலிகள் அமைப்பு மேலும் பலவீனப்படுத்தப்பட்டிருக் கின்றது என்று மனித உரிமைகள் மற்றும் அனர்த்த நிவாரண அமைச் சர் மகிந்த சமரசிங்க தெரிவித்திருப் பது தொடர்பாக கருத்து வெளியிட்ட இளந்திரையன் அது தவறான கரு த்து என்று மறுத்தார்.

இது ஒரு ஜனநாயக நடவடிக் கையாக அமைந்திருக்கவில்லை. இந்த அரசாங்கம் மேற்கொண் டுள்ள ஜனநாயகத்தை அழிக்கும் ஒரு செயற்பாடாகவே இது அமைந் திருக்கின்றது.

அரசாங்கத்தினதும் அதன் துணை இராணுவக் குழுவினதும் தவறான செயற்பாடுகளுக்குச் சட்ட உரிமையைக் கொடுப்பதாகவே இந் தத் தேர்தல் அமைந்திருக்கின்றது என்றும் குறிப்பிட்டார். (எ-5)

# சர்வ...

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற் கான சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் பங்கேற்பதற்கு முழு உரிமையைப் பெற்றுள்ளார்கள் என ஊடக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்துள்ளார். (அ)

# பெரும்...

கொடுத்து அதன் மூலம் நாடாளு மன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பலத்தைக் குறைப்பதற் கும் மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுள்ள தாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (ச-5)


APEX HOSPITAL (PVT) LIMITED

❖ தகுதிபெற்ற வைத்தியர்களின் 24 மணிநேர சேவை - அமைதியான சூழல்
❖ பிரபல வைத்தியர்களின் வைத்திய ஆலோசனைகள்
❖ ஆய்வு கூட சேவைகள். ❖ தங்குமிட வசதிகள்.

தேவை

❖ மருந்தாளர் - (பார்மஸிஸ்ட் சான்றிதழ்)
❖ M.L.T/D.M.L.T - (ஆய்வு கூடப் பரிசோதகர்) சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும்.
❖ மருத்துவமனை முகாமையாளர்:- (ஆண்/பெண்) வயது:- 25-45
(மும்மொழிகளிலும் தேர்ச்சி, முகாமைத்துவப் பட்டப் படிப்பு)
❖ கணக்காளர் - (ஆண்/பெண்) வயது:- 25-45
(ஆங்கில அறிவு, கணக்கியல்துறைப் பட்டப்படிப்பு, 2 வருட அனுபவம்)
❖ மேற்பார்வையாளர் -(ஆண்) வயது:- 35 ற்கு மேல்- முன்னனுபவம்
❖ எழுதுவினைஞர் -(ஆண்/பெண்) வயது:- 18-28 - G.C.E. (A/L)
❖ தாதிகள் - (பெண்கள்) வயது:-18-28 G.C.E. (O/L),G.C.E. (A/L)
(பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்)
❖ உதவியாளர்கள் -(ஆண்/பெண்) வயது:- 18-28 G.C.E. (O/L)
❖ பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் -(ஆண்) வயது:- 20-35 தேகாரோக்கியம் உடையவர்
❖ சுத்திகரிப்பாளர்கள் -(ஆண்/பெண்) வயது:-18-45

விண்ணப்பதாரிகளின் போக்குவரத்து நலன் கருதி விண்ணப்பப் படிவத்தை நாவலர் பதிப்பகம், 112, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி என்ற முகவரியில் பெற்றுக் கொள் ளலாம்.

முடிவுத் திகதி :- 15.03.2008

T.P. 077 4452545 (C-846)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.